சரசுவதி மகால் வெளியீட்டு எண். 377

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

ராக்ஷஸ காவ்யம்

(மஹாகவி காளிதாஸன் இயற்றியது)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1997] [விலை : ரூ. Rs 120

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 377

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

ராக்ஷஸ காவ்யம்

(மஹாகவி காளிதாஸன் இயற்றியது)

(தமிழ் மொழிபெயர்ப்புடன்)

பதிப்பாசிரியர் :

தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

[விலை : ரூ. 13-00

1997]

0377

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

Sarasvati Mahal Library Thanjavur

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	ராக்ஷஸ காவ்யம்
பதிப்பாசிரியர்	:	தேதியூர் S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரஸ்வதி மகால் நூலகம்.
வெளியீட்டு எண்	:	377
மொழி	:	ஸம்ஸ்க்ருதம், தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர், 1997
தாள்	:	10. 9 கி. கி. சேஷசாயி
நூல் அளவு	:	25 × 19 செ. மீ.
பக்கங்கள்	:	52
படிகள்	:	250
எழுத்து	:	16 - 12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரஸ்வதி மகால் அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	காவ்யம்
விலை	:	ரூ. 13—00

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகம் "ராக்ஷஸ காவியம்" என்னும் அரிய சிறு சம்ஸ்கிருத நூலை உரையுடனும், தமிழ் மொழிபெயர்ப்புடனும் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகப் புகழ்பெற்ற மகாகவி காளிதாஸன் இந்த நூலை இயற்றியுள்ளார் என்பதையறிய வியப்பாக இருக்கிறது.

உவமை அணியினைக் கையாள்வதில் வல்லவரான காளிதாசனின் சிறப்பிற்கு அவர் தம் இலக்கியங்களில் பாத்திரப் படைப்பிற்கு ஏற்பவும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவும், எளிய முறையிலும், எளிய சொற்கள் கொண்டும், புதிய புதிய கருத்துக்களைத் தோற்றுவிக்கும் விதத்திலும், இயல்பாகவும், உவமைகளைக் கூறுவதே காரணம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் காளிதாஸன் தம் கற்பனையில் கண்டு கூறிய கருத்துக்கள், இன்றும்கூட இன்றைய நாகரிக உலகிற்குப் பொருந்துவதாக இருப்பதும் அவருடைய சிறப்பிற்குச் சான்றாகும்.

குமார சம்பவத்தில் 3-வது அத்தியாயத்தில் "ஒரு ஆண் வண்டும் பெண் வண்டும் அன்பின் வயப்பட்டு ஒரே மலரில் அமர்ந்து ஒன்றையொன்று அனுசரித்து, அதிலும் ஆண் வண்டு பெண் வண்டை அனுசரித்துத் தேனை உறிஞ்சிக் குடிக்கிறது" என்பதாக ஒரு வர்ணனை.

இன்று ஒரே கண்ணாடிக் குப்பியில் உள்ள சுவைநீரை அன்புள்ளம் கொண்ட ஆணும், பெண்ணும் இரண்டு உறிஞ்சு குழல்கள் கொண்டு அருந்துவது நாகரிகமாகக் கருதப்படுகிறது.

இலக்கியங்களில் வருணிக்கப்படும் இலக்கியச் சுவைகளைச் சுவைப்பதற்குக் கவிகளால் கையாளப்படும் எளிய சொற் பிரயோகமே முக்கிய காரணமாகும். புழக்கத்தில் இல்லாத கடினமான சொற்களைக் கொண்டுள்ள இலக்கியங்களுக்கு அறிஞர்களிடையே வரவேற்பு இருப்பதில்லை.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

வெளியிடப்படும் "ராக்ஷஸ காவியம்" அத்தகையதொரு இலக்கிய மாகும். இதில் ராக்ஷஸன் யாரும் வருணிக்கப்படவில்லை. ராக்ஷஸத்தனமான சொற்கள் கொண்டு அமைந்த நூல் என்பதாலேயே அப்படியொரு பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும்.

விரிவான தமிழ் மொழிபெயர்ப்புடனும், முன்னுரையுடனும் இதனைப் பதிப்பித்த நூலக மேனிலை சம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இத்தகைய அரிய நூலை வெளியிட ஊக்குவிக்கும் நூலக நிருவாக அலுவலர் திரு ப. சுப்ரமணியன் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகத்தினருக்கும் ஏனையோருக்கும் என் பாராட்டுக்கள்.

இதுபோன்ற அரிய நூல்களை வெளியிட நிதியுதவி நல்கிவரும் நடுவண் அரசுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

து. நா. இராமநாதன், இ. ஆ. ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்
10—9—1997.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

முன்னுரை

கல்வி அறிவு பெற்றவர் எவரும் காளிதாசனைப்பற்றி அறியாமல் இருப்பதற்கில்லை. காளிதாசன் தனது இணையற்ற கற்பனைத் திறனாலும், வருணனைச் சிறப்பினாலும் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு அழியாத — உயர்ந்த இடத்தை அமைத்துக் கொண்டான்.

காளிதாசனைப் பற்றிய விபரங்கள் — அவன் தோன்றிய காலம், இடம், பயிற்சி பெற்றுச் சிறப்புற்ற இடம், அவன் இன்ன காவியங்களைத்தான் இயற்றியுள்ளான் என்பது போன்ற விபரங்கள் பற்றி ஆராய்ச்சித்துறை ஆசிரியர்களின் ஆய்வு இன்னமும் முடிவுற்றதாகத் தெரியவில்லை. அவன் இயற்றியதாகத் தீர்மானமாகத் தெரியவருகிற இலக்கியங்களில், அக்கவி குறிப்பிடும் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு சில விபரங்களைத் தருகிறார்களே தவிர, இதுதான் என்று தீர்மானமான சான்றுகள் கொண்டு அக்கவி பற்றிய விபரங்களை உறுதி செய்யமுடியவில்லை.

தீர்மானமாகத் தெரியாத ஒரு பொருளைப் பற்றிப் பலரும் தந்தம் திறமைக்கும் — மனப்பாங்குக்கும் ஏற்றவாறு கற்பனையாகக் கூறுவதுதான் இயல்பாக இருக்கிறது. கண்களுக்குப் புலப்படாத கடவுளைப் பற்றித்தான் எத்தனை எத்தனை இலக்கியங்கள், துதிப்பாடல்கள், இதிஹாஸ புராணங்கள்!

இதனையனுசரித்து காளிதாஸ மஹாகவி போஜ மன்னரின் அவையினை அலங்கரித்த மஹா கவிஞருள் ஒருவர் என்று கற்பனையாக 'போஜ ப்ரபந்தம்' என்ற நூலும் தோன்றியுள்ளது. அதில் கூறப்பட்ட செய்திகளும் உண்மைச் செய்திகள் போல பரவலாகப் பேசப்பட்டும் வருகிறது.

"ப்ரபந்தம்" என்ற சொல்லுக்குச் சிறப்பாகக் கற்பனையாக அமைக்கப் பட்ட நூல். ஒரு உண்மை நிகழ்ச்சி, தலைவனை மையமாக ஆதாரமாகக் கொண்டு கற்பனையாக அமைக்கப்பட்ட நூல் என்று பொருள். (A work of of imagination founded on a substration of fact.)

"போஜப்ரபந்தம்" என்ற நூல் ஸம்ஸ்க்ருதம் அறிந்தோர் வேடிக்கையாக, நல்லவிதமாக இலக்கிய உணர்வுடன் பொழுது போக்குவதற்காகவே அமைக்கப்பட்ட நூல் எனலாம். பல காலகட்டங்களில் தோன்றிய கவிஞர்கள் ஸம்ஸ்க்ருதப் பேரறிஞரான போஜ மன்னரின் அவையில் அந்த அரசனின்

பரு. ரா — i

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பேராதரவிற்கும் பெருமதிப்பிற்கும் பாத்திரமாகி விளங்கினார் என்பதாகக் கற்பனையாகப் புனையப்பட்டதே அந்த நூல். அது முக்கியமாக காளிதாஸ மஹா கவியின் பெருமையைப் பறைசாற்றும் நூல் என்று கூடச் சொல்லலாம்.

காளிதாசனின் உண்மையான காலம் இதுதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் அவர் பிற்காலத்திய போஜ மன்னரின் சமகாலத்தவர் போலவும் போஜ மன்னரின் வாயிலாக காளிதாஸனின் பெருமைகள், சிறப்புகள் பிரபலமாயின என்பது போலவும் அந்த "போஜப்ரபந்த" நூல் (அமைக்கப்பட்டது) கூறுகிறது.

உதாரணமாக: போஜ மன்னன் ஒருநாள் மாறுவேடமணிந்து நகர் வலம் வந்தபொழுது ஒரு வீட்டில் நடந்த நிகழ்ச்சி மன்னரின் கவனத்தைக் கவர்ந்தது. நண்பகல் நேரம். பகல் உணவு அருந்தும் நேரம். காக்கைகளுக்கு பலியுணவு கொடுத்த பிறகுதான் உணவு உண்ண வேண்டும் என்ற மரபிற்கு ஏற்ப அவ்வீட்டின் தலைவர் காகங்களுக்கு பகலில் பகலுணவு வழங்கினார். காகங்கள் பல சத்தமிட்டவாறு அதனை உண்பதற்கு அங்கு குழுமின. காக்கைகளின் ஒலியின் கொடூரத்தைக் கேட்டு பயந்த அவருடைய இளம் வயது மனைவி, ஐயோ! இந்தக் காகங்கள் என்னை நோக்கிக் கர்ணகொடூரமாகக் கத்துகின்றனவே என்று பயந்து பக்கத்தில் நின்ற புருஷனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். அவ்வயோதிக புருஷனும் அதனை நம்பி அவளை அணைத்துத் தேறுதல் கூறினான். இதனைக் கண்ட மன்னன் போஜன் இந்த இளம்பெண் "பாசாங்குக்காரி, நேர்மையில்லாதவள்" என்று தீர்மானித்துக் கொண்டு அன்று முழுவதும் அது பற்றிய தீவிர விசாரணையில் இருந்தான்.

அப்பெண்பற்றிய உண்மையை அறிய போஜ மன்னன் ஆவல் கொண்டான். மாலை நேரம் வந்து இரவும் வந்தது. எங்கும் இருள் சூழ்ந்து அமைதி நிலவியது. நேரம் சென்றுகொண்டிருந்தது. முடிவில் மன்னனின் எண்ணத்தை உறுதி செய்வதுபோல் வீட்டின் பின்புறத்தில் ஒரு விளக்கு வெளிப்பட்டது. ஒரு உருவமும் வெளிப்பட்டது. அந்த உருவம் அன்றைக்குப் பகலில் காக்கைக்கு பயந்து கணவனைக் கட்டிப்பிடித்த பெண் என்பதை அறிந்து வியப்புற்றான். அவள் விளக்கை ஒரு கூடையின் உள்ளே வைத்துக் கொண்டு வேகமாகச் செல்வதைக் கண்ட போஜராஜனும் அவளைத் தொடர்ந்து சென்றான். வழியில் நர்மதை ஆறு குறுக்கிட்டது. இப்பெண் நர்மதையில் இறங்கப் போகிறாளா! அங்கு ஏராளமான முதலைகள் உண்டே என்று அரசன் எண்ணமிட்டபொழுது. அப்பெண் கூடையிலிருந்து விளக்கை எடுத்துக் கரை ஓரமாக வைத்துவிட்டு, ஏதேதோ துர்வாசனையுள்ள பொருள்களை வெளியில் எடுத்துப் போட்டாள். சற்று நேரத்தில் பல முதலைகள் அந்த இடம் நோக்கி வரலாயின. அப்பெண் பரபரப்புடன் சிறு தோணியைக் கொண்டு நர்மதை நதியைக் கடந்து சென்றாள்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இரவு நேரத்தில் வயது முதிர்ந்த கிழவரின் மனைவி—இளம்பெண்ணின் இந்தச் செய்கை அவளது நேர்மையற்ற மனதைக் கூறுவதாக இருந்தது.

மறுநாள் அரச சபையில் காளிதாஸன் உள்பட பல கவிஞர்களும் குழுமியிருக்கும்பொழுது, போஜ மன்னன் ஒரு புதிர்போன்ற சொற்றொடரைக் கூறினான்.

दिवा काकरुताद्भीता

(திவா காகருதாத்பீதா)

[பகலில் காகத்தின் கரைதல் ஒலிகேட்டு பயந்த ஒரு பெண்]

இப்படி புதிர் போன்று போஜ மன்னன் கூறிய சொற்றொடர் கேட்ட அவையிலிருந்த கவிஞர்கள் பதில் கூறமுடியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது,

காளிதாஸன் :

रात्रौ तरति नर्मदाम् ।

(ராத்ரௌ தரதி நர்மதாம் ।)

[இரவில் நர்மதை ஆற்றைக் கடந்து செல்லக்கூடும்]

போஜன் : காளிதாஸன் நேரில் கண்டதுபோல் கூறுவது கேட்டு, மிகவும் வியப்புற்றான். மேலும் தொடர்ந்து

तत्र सन्ति जले ग्राहाः

(தத்ர ஸந்தி ஜலே க்ராஹா:)

[அந்த நர்மதை ஆற்றின் நீரில் முதலைகவ் பல இருக்கின்றன] (எனில்)

காளிதாஸன் :

मर्मज्ञा सैव सुन्दरी ॥

(மர்மக்ஞா ஸைவ ஸுந்தரீ ॥)

[அந்த முதலைகள் உள்ள நர்மதை ஆற்றையும் கடக்கிற விஷயத்தில் உள்ள ரகசியத்தை அந்த அழகி அறிவாள்] என்று காளிதாஸன் பதில் கூறினான்.

ஆராய்ச்சி வல்லுநர்கள் காளிதாஸனின் காலம் பற்றிக் கூறிய செய்தி ஒருபுறம் இருக்க, காளிதாஸனுக்குப் பிறகு பல நூற்றாண்டு சென்று தோன்றிய

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கவியால் இயற்றப்பட்ட "போஜ ப்ரபந்த"த்தில் கூறப்படும் செய்திகள் காளிதாஸனையும், போஜ மன்னனையும், பிற கவிகளையும் இணைத்துக் கூறப்படும் செய்திகள் அனைத்தும் கற்பனையே.

பவபூதி கவியின் காலம் வேறு. காளிதாஸனின் காலம் வேறு. உண்மை அவ்வாறிருக்க இருவரும் சமகாலத்தவர் போல சித்தரிக்கும் "போஜப்ரபந்தம்" கற்பனைச் செய்திகள் அடங்கிய நூலேயாகும். ஆனால் படிக்கப்படுகின் மெய்மறக்கச் செய்யும் கற்பனை சம்பவங்களும் வருணனைகளும் அவை உண்மைச் சம்பவங்கள் தாமோ என எண்ணச் செய்யும்.

இந்நாட்களில் பிறர் எழுதிய நல்ல நூல்களைத்தாம் எழுதியதாகச் சிலர் தம் பெயரில் வெளியிடுவது போல் முன்நாட்களில் சிறந்த கவிகளின் பெயர்களைத் தாம் இயற்றிய இலக்கியங்களின் கர்த்தாக்களாக அமைத்தனர், அமைத்திருக்கலாம்" என்று தெரிகிறது.

இந்த "ராக்ஷஸ காவியம்" நூலை காளிதாஸன்தான் இயற்றினானா! அல்லது காளிதாஸன் பெயரில் வேறு யாரேனும் இயற்றியதா! என்பது புதிராகவே உள்ளது. ஒன்று மட்டும் நிச்சயம். ஒரு ஸம்ஸ்க்ருத இலக்கியம் எப்படி இருக்கலாகாது என்பதற்கு இந்த ராக்ஷஸ காவியம், "ராதாவிநோத காவியம்" முதலானவை சான்றுகளாகும்.

இந்தச் சுவடியைச் சிறுநூலாகவும், நூலக மலரிலும் வெளியிட ஊக்கமளித்த நூலக இயக்குநரும் தஞ்சை மாவட்ட ஆட்சியருமான திரு. து. நா. இராமநாதன், இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றி. அரிய நூல்களை நல்ல முறையில் வெளியிட ஊக்கமளித்த நூலக நிருவாக அலுவலர் திரு. பி. சுப்பிரமணியன் அவர்களுக்கும், நூலக நூல் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும் நன்றி.

நூலை நல்ல முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகப் பிரிவினருக்கும் என் நன்றி.

தஞ்சாவூர்
21—8—97

தேதியூர் S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,
மேநிலை ஸம்ஸ்க்ருத பண்டிட்,
சரஸ்வதி மஹால் நூலகம்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

तेदियूर्. पण्डित कृष्णमूर्तिशास्त्री
सरस्वतीमहालयग्रन्थालयः, तञ्जावूर्.

कश्चिद्वनं बहुवनं विचरन् वयस्थो
        पश्यां घनात्मवदनां वनितां वनार्द्राम् ।
तर्वर्यरिप्रदमुदीक्ष्य समुत्थितं खे
        ना गामिमां मदकलः सकलां बभाषे ॥ १

पश्याब्जदृक् गिरितटेषु कुमातृसाहान्
        भूदेवराजरिपुशत्रुसमावधूतान् ।
वैश्वानरारिजरिपुघ्नशराभिभूतैः
        दृक्श्रोत्रशत्रुभिरुपाश्रितपुष्पशोभान् ॥ २

पश्याब्धिसारसदृशाभिरभू(मी)भिरद्भिः
        आप्लावयत्यमरगुप् धरणीमहिघ्नः ।
अब्दः सिताभिरसितः शबलः खगाभिः
        वार्जैः गिरीरिव विभाति वनप्रबुद्धैः ॥ ३

गोष्ठं घृतं सुघृतवद्भिरमीभिरग्र्यं
        गोभिः समुद्धरति यद् बहुधा हिमघ्नः ।
तद् गव्यमम्बरगतं शिखिजात्मसंस्थं
        विस्यन्दमानं अभिवर्धयतीह गोजान् ॥ ४

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

अब्रुटूपलाशनिभदृक् घनजातमवक्त्रा

वार्चस्वरेभनिभदृक् गजदोःसमोरुः ।

सीरिध्वजप्रसवतुल्यविपाह्वदासौ

नूा सङ्गता प्रमुदिता प्रसमीक्ष्य वार्दम् ॥ ५

सूर्यांशुनाम पतिरुन्नतदृप्तगामी

वाङ्नामभिः परिवृतो विपनामदाभिः ।

उस्राचरः प्रमुदितः प्रतिनानदीति

गर्जन्तमीक्षणहितोच्चयतुल्यरूपम् ॥ ६

एतं पयोदपतिरुन्नमितं पयोदं

खस्थं महीतलगतः प्रतिगर्जतीव ।

भित्वाऽवनिं वनरुहाक्षि शिरोरुहाभ्यां

सम्प्रस्थितोऽमृतधरैरभिषिच्यमानः ॥ ७

स्रोतोजविक्षतजभूधरधातुरूपाः

खस्थाः पयोजदलदृक् शुचिशुक्रभागोः ।

मासोर्नभस्यनभसोरति सम्पतन्तः

तीव्रं विषं विषधराः पारंनिर्वपन्ति ॥ ८

स्वयोनिभक्षध्वजसम्भवानां

श्रुत्वा निनादं गिरिगह्वरस्थः ।

तमोऽरिबिम्बप्रतिबिम्बधारी

विरौति कान्ते पवनाशनाशः ॥ ९

गोष्ठश्च कुङ्कुमवपुः प्रतिराजतेऽसौ

सप्त्यद्रिदैत्यभुजगोत्तमशत्रुगोपः ।

उर्वीधराभ्रमचिरोत्थितमम्बरं खे

दृष्ट्वा हि हा प्रमुदितो हि महाह्वयानः ॥ १०

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

कृष्णाम्बरः क्षरति तोयमसावजस्रं
अन्याविमौ रणगताविव वेभराजौ ।
अन्ये त्वमी द्विरदवृन्दनिभाः क्षरन्तः
प्रच्छादयन्त्यमरसिद्धविमानमार्गम् ॥ ११

वार्ताः खगाः क्षितिधरागमनप्रकाशा
नेमीभरामभतुरङ्गमतुल्यघोषाः ।
वार्द्धारिताः खमवतत्य घनं क्षरन्तो
वार्भिः क्षितिं घृतभराः परिनिर्वपन्ति ॥ १२

एषोऽङ्घ्रिपाशनरिपुप्रसुतारिसाह्व-
मारुह्य तिष्ठति सुगात्रि भुजङ्गमारिः ।
यस्य स्वनैः प्रमुदितस्य ममाद्य बाले(देहे)
तालध्वजाग्रजसूनुशराः पतन्ति ॥ १३

उग्राविषं स्थलगतोऽस्ति तथैव वाभ्यो
वाजो द्विजः स्वपितृभीरुविपप्रहीनः ।
वाताशनः खशयनः स्मरति स्थलस्य
चक्षुःश्रवा वनभयात्सुरशत्रुनामा ॥ १४

पक्ष्यश्वमेधतुरगप्रतिमोऽष्टवर्णो
वार्दं नवं त्विति समाह्वयति ह्यहिघ्नः ।
भेकस्तथैव खशयाशयवेद्यवाणिः
शब्दं करोत्यतिभृशं विपराशिमग्नः ॥ १५

ना विष्टिरा वनमुपेत्य कुमातृसाह्व-
माक्रीडने मधुकलो तनयासमेतः ।
अन्यः स्वयं मणिवराभमुपेत्य गोजं
ना रामया सह पयःपतिजां वृणीते ॥ १६

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

स्यूतं महत् क्षतजवर्णनिभं वरोऽसौ
वर्भर्ति(र्त्य)अमूनि च भिनत्ति सरोरुहाणि ।
तज्जेन वापि रजसा वनितां वयस्स्थो-
ऽप्यभ्युद्धरत्यवकिरत्यभिषिच्यमानः ॥ १७

पङ्के निमग्नमिभवृन्दमदः श्ववारि
गर्जत्तिमी(मि)क्षयदवृन्दमिवावभाति ।
वार्यात्मनः शतविचित्रतनुः सुपर्णो
योषिद्वृतः समदनः प्रतिरोरवीति ॥ १८

विस्फोटिताम्बररवेण रिरंसुरेव
सन्त्रासितो हरिरनोकहनिष्कुटीषु ।
संलीयते ह्यभिमुखीं तडितं च दृष्ट्वा
खात् खं महत्तरमसौ समनुप्रविष्टः ॥ १९

एतावदुत्तमवचः सुमनाः स उक्त्वा
रन्त्वा दिनं सह तया प्रियया ह्यदीनः ।
युक्तं चतुर्भिरनडुद्भिरदीनवद्भि-
रारुह्य यानमथ स प्रययौ स्वगेहम् ॥ २०

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ राक्षसकाव्यम् ॥

(कालिदासविरचितम्)

ராக்ஷஸகாவ்யம்

(மஹாகவி காளிதாஸன் இயற்றியது)

कश्चिद्वनं बहुवनं विचरन् वयस्थो
वश्यां वनात्मवदनां वनितां वनार्द्राम् ।
तर्वर्यरिप्रदमुदीक्ष्य समुत्थितं खे
ना गामिमां मदकलः सकलां बभाषे ॥ १

व्याख्या : कश्चित् अनिर्दिष्टनामा ना पुरुषः–इमां प्रत्यक्षां सकलां समस्तां गां वाचं, वनितां स्त्रियं प्रति बभाषे अब्रवीत् । किं कुर्वन् । वनं काननं विचरन् भ्रमन् । किं भूतं वनम् । बहुवनं बहूदकम् ॥ " वनं सलिलकानने " इति अमरः । किम्भूतो ना । वयःस्थः वयसि तिष्ठतीति वयःस्थः युवा इत्यर्थः । पुनः किंविधः । मदकलः हर्षयुक्तः । अथवा मदेन मद्येन अव्यक्तवाक् । अथवा मदस्य मदनस्य कला विद्यते यस्मिन् इति ॥ किं कृत्वा । तरवः वृक्षाः तेषां अरिः शत्रुः अग्निः, तस्यारिः उदकं, तत् प्रददातीति असौ मेघः । तं खे आकाशे समुत्थितं समुत्पन्नं उद्वीक्ष्य दृष्ट्वा । किं भूतां वश्यां, स्वाधीनां, पुनः किंविधां (वनात्मवदनां) वनं उदकं तत् आत्मा यस्यासौ चन्द्रः, उदधिमथनोत्पत्तेः । तद्वत् वदनं यस्यास्तां । पुनः किंविधां — उदकेन आर्द्रा आर्द्रीकृताम् ॥ १

நமது கைகளில் உள்ள விரல்களில் மற்றவைகளைவிட குட்டையாக கட்டையாக இருப்பதால் "அங்குஷ்ட்டம்" என்று கட்டை விரலும் பிறரை அதட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் விரல் "தர்ஜனி" என்று ஆட்காட்டி

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

விரலும், இரு பக்கங்களிலும் இரண்டு விரல்கள் இருப்பதால் "மத்யமா" என்று நடுவிரலும், கடைசியில் உள்ள விரல் அளவிலும் பருமனிலும் மெலிந்து இருப்பதால் "கனிஷ்டிகா" என்று நுனி விரலும், ஸம்ஸ்க்ருதச் சொற்களால் வழங்கப்படுகின்றன. தமிழ்மொழியில் மோதிரம் அணிவதற்கானது என்பதால் (ஒரு மோதிரம் மட்டும் எப்போதும் அணிவோர் அணியவேண்டிய விரல்) மோதிர விரல் என்று வழங்கப்படும் விரலைக் குறிப்பிடும் ஸம்ஸ்கிருதச் சொல் "அநாமிகா" என்பதாகும். பெயர் இல்லாதது. பெயர்ப் பொருத்தம் இல்லாதது என்பது இதன் பொருள். இந்த விரலுக்கு மட்டும் பெயர்ப் பொருத்தம் ஏன் இல்லை? ஏதாவது ஒரு காரணம் இருந்தாக வேண்டுமே என்று சிந்தித்த ஒரு கவி பின்வருமாறு கற்பனையாகக் கூறினான்.

> "पुरा कवीनां गणनाप्रसङ्गे
> कनिष्ठिकाऽधिष्ठितकालिदासा ।
> अद्यापि तत्तुल्यकवेरभावात्
> अनामिका सार्थवती बभूव ॥"

முன்பொரு சமயம் உயர்தரக் கவிகள் யார் யார் என்று விரல்விட்டு எண்ண முற்பட்டபோழ்து காளிதாஸன் என்று சுண்டு விரலை மடக்கினர். அடுத்து யார்? என்று அவருக்கு ஈடானதொரு கவி யார் என்று சிந்தனை செய்து பார்த்ததில் எந்த ஒரு கவியும் அவனுக்கு அடுத்தாற்போல் எண்ணப் படுவதற்குத் தகுதியுள்ளவர் இல்லையென்பதால்தான் சுண்டு விரலுக்கு அடுத்த விரல் "அநாமிகா–பெயர் இல்லாதது" என்று வழங்கப்படலாயிற்று. அநாமிகா — காரணப் பெயராகவே ஆயிற்று என்று கூறினார்.

> "उपमा कालिदासस्य भारवेः अर्थगौरवम् ।
> दण्डिनः पदलालित्यं माघे सन्ति त्रयो गुणाः"

"உவமையைச் சிறப்பாகக் கூறும் குணம் கவி காளிதாஸனுக்கு உரியது. பொருள் சிறப்புடன் கூறுவது கவி "பாரவி"க்கு உரியது. அழகான சொல்நடை அழகு கவி 'தண்டி'க்கு உரியது. இம்மூன்று சிறப்புக்களும் கவி 'மாக'னுக்கு உரியது."

உவமையைச் சிறப்பாக — அந்தந்த இடத்திற்கு ஏற்ப மிகமிகப் பொருத்தம் உள்ளதாக — வியக்கும் விதத்தில் காளிதாஸனைப்போல் உவமை அணியைக் கையாண்ட ஸம்ஸ்க்ருத கவிகள் யாருமில்லை. காளிதாஸனின் ரகுவம்சம், ராமனின் முன்னோர்களான திலீபன் தொடங்கி ரகு, அஜமஹாராஜன், தசரதன் பற்றிக்கூறி ராமனுடைய சரிதத்தை விரிவாகக்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

கூறி "அக்னிவர்ணன்" என்ற அரசன்பற்றிய செய்திகளுடன் நிறைவுபெறும் காவியம். இக்காவியத்தில் பல பல இடங்களில் உவமை அணியைச் சிறப்புறக் கையாண்டாலும் அஜ மஹாராஜன்-இந்துமதி திருமண காலத்தில். இந்துமதி மணமாலையைக் கையிலேந்தி சுயம்வர மண்டபத்தினின்று வந்து ஒவ்வொரு மன்னரையும் கடந்து செல்லும்போது அவளை ஒளிமிகுந்த தீபச்சுடருக்கு ஒப்பிட்டுக் கூறுகிறவிதம் எண்ணி எண்ணிப்பார்த்து மகிழச்செய்வதாகும். இதனாலேயே இந்த நூற்றாண்டில் இருந்த பேராசிரியர்கள் "தீபசிகா காளிதாஸன்" என்று அவனைச் சிறப்பித்துக் கூறினர்.

குமாரஸம்பவத்திலும் பல உவமைகள் கூறப்பட்டாலும், 5வது ஸர்கத்தில் (Chapterல்) கடைசி ச்லோகத்திற்கு முதல் ச்லோகம் :--

" मार्गाचलव्यतिकराऽऽकुलितेव सिन्धुः
शैलाधिराजतनया न ययौ न तस्थौ ॥ "

உமாதேவி சிவபெருமானையே மணாளனாக அடையும் நிரத்துடன் மாபெரும் முனிவர்களும்கூட தவம் என்றால் எவ்வாறு செய்யவேண்டும் என்று தெரிந்து கொள்ளும் விதத்தில் கடும் தவம் மேற்கொள்கிறாள். உமையைச் சோதனை செய்ய சிவபெருமானே ஒரு இளம் வயது அந்தணன் போன்ற தோற்றத்துடன் அவ்விடம் வந்து உமையவள் தவம் செய்யும் நோக்கம் அறிந்து சிவபெருமானைப் பற்றி இழித்துக் கூறுகிறார். அவரை யாரோ ஒரு பிரம்மச்சாரி என்று எண்ணிய உமா, சிவபெருமான்மீது அவர் கூறும் இழிச் சொற்களைக் கேட்டு ஒவ்வொன்றுக்கும் பதில் அளிக்கிறாள்.

பெண்ணே! உலகில் மிகவுயர்ந்த வளமான குலத்தில் தோன்றிய நீ சிவனைக் கணவனாகத் தேர்வு செய்து, அதற்காகத் தவமும் செய்வதைப் பார்க்கும்பொழுது நீ சிந்தனைசக்தியற்றவள் என்று எண்ணச் செய்கிறது. சிவபெருமானின் தந்தை யார்? தாய் யார்? என்று யாருக்குத் தெரியும்? பெற்றோர் பெயர் தெரியாதவன். தங்க இடமில்லாமல் சுடுகாட்டில் தங்கு கிறான். இடையில் அணிவதற்கு நல்ல துணிகூட இல்லை. உடலெங்கும் பாம்புகளைச் சுற்றிக்கொண்டு திரிபவன். எல்லோருக்கும் இரண்டு கண்கள் என்றால் அவனுக்குமூன்று கண்கள். திருமண காலத்தில் "பாணிக்ரஹணம்"- மணப்பெண்ணின் கையை மணமகன் பற்றுதல் எனும் — சடங்கின்பொழுது ரத்தம் சொட்டும் யானைத் தோலை இடையில் அணிந்தும், உடலெங்கும் பாம்புகளை அணியாக அணிந்துள்ள சிவனுடைய கையை நீ பற்றும் பொழுது கொடிய பாம்புகள் சீற்றமுடன் தலையைத் தூக்கும் அந்த நிலையில், நீ மகிழ்ச்சி பொங்க நிற்கவேண்டியிருக்க, பயந்து கையைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ளவேண்டியிருக்கும். தவிர, திருமணத்தில் "ஊர்வலம்" என்ற நிகழ்ச்சி நடைபெறும். அலங்கரிக்கப்பட்ட யானைமீது அல்லது

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நவரத்னப் பல்லக்கில் ஊர்வலம் வரவேண்டிய உன்னை சிவபெருமான்தன் ஒருவனையே தாங்க சக்தியில்லாத கிழட்டுக் காளைமீது உன்னையும் உட்கார வைத்து நகர் வலம் வரும்பொழுது பொதுமக்கள் அந்த அவல நிலை கண்டு பரிகாசமாகச் சிரிப்பார்களே! மலையரசன் மகளுக்கு இப்படி ஒரு நிலையா என்றல்லவோ பரிகாசம் செய்வார்கள், சிவனிடம் என்ன தகுதி இருக்கிறதென்று நீ அவனை மணக்க இப்படி உடம்பை வருத்தித் தவம் செய்கிறாய்? எனக்குத் துளியும் இதில் சம்மதமில்லை என்று அவ்வந்தண வாலிபன் கூறியது கேட்ட உமை (பார்வதி) தன் தோழியிடம் இவர் இனியும் பேசலாகாது பேசாதிர் என்று சொல் என்று கூறிவிட்டு, "गुरोर्यत्र परीवादः निन्दा वापि प्रवर्तते । कर्णौ तत्र पिधातव्यौ गन्तव्यं वा ततोऽन्यतः ॥" "பெரியோர்கள் பற்றிய அபவாதச் சொற்களை யாரேனும் பேசினால், காதுகளைப் பொத்திக்கொள்ளவேண்டும். இல்லையேல் அவ்விடத்தைவிட்டே அகன்றுவிடவேண்டும் என்பார்கள். எனவே நான் இவ்விடம்விட்டு வெளியேறுகிறேன்" என்று கூறியவாறு ஆச்ரமத்தின் வாயிலை நோக்கிச் செல்ல ஓரடி எடுத்தாள். தூக்கிய கால் தூக்கப்பட்ட நிலையிலேயே இருக்க, குறுக்கே வாசல் பகுதியில் சிவபெருமான் தன் சுய உருவத்துடன் தோன்றி ஒரு கையால் அவளைத் தடுத்தார். சிவபெருமானைக் கண்ட பார்வதி வெளியில் செல்லவும் விரும்பவில்லை. அவரருகில் நிற்கவும்—உள்ளே இருக்கவும் வெட்கப்பட்டாள். தூக்கிய கால் தூக்கப்பட்டபடி இருக்க, வெளியில் செல்வதற்கு முயற்சிக்கும் நிலை-வெட்கம்-மகிழ்ச்சி உணர்வுடன் உள்ளே இருக்கவும் ஆசை என்ற கலவை உணர்ச்சியுடன் உள்ள பார்வதியை காளிதாஸன் இவ்வாறு வருணிக்கிறார்.

" मार्गाचलव्यतिकराकुलितेव सिन्धुः

शैलाधिराजतनया न ययौ न तस्थौ ॥ "

மார்க-அசல-வ்யதிகர ஆகுலிதேவ ஸிந்து:

சைலாதிராஜதனயா ந யயௌ ந தஸ்தௌ ॥

மலையருவி சிற்றாறாகச் செல்லும் இடங்களில் சிறு ஆற்றின் நீர், வழியில் உள்ள பெரிய பாறைகளால் தடுக்கப்படும்பொழுது, மேற்கொண்டு செல்ல முடியாதபொழுது பாறையருகில் வந்ததும் சுழித்துக்கொண்டு தேங்கி நிற்கும் ஆற்றின் நீர் மேற்கொண்டு செல்லத்தான் விரும்புகிறது. செல்லமுடியாதபடி தடுக்கவும்படுகிறது. சுழித்துக்கொண்டு நிற்கும் சிற்றாற்றின் நிலையில் பார்வதி சிவபெருமானால் தடுக்கப்பட்டதால் வெளியில் செல்லவும் இல்லை. வெட்கம் மிகுதியால் அங்கு நிற்கவும் இயலவில்லை.

இதுபோல் காளிதாஸன் தம் இலக்கியங்களில் பல பல இடங்களில் மிகமிக உயர்ந்த உபமானங்களைச் சொன்னாலும், தம்மையும் மீறி உணர்ச்சி வசப்பட்டுச் சொல் பிழையுடன் கூறும் உவமையும் ஒன்று உண்டு.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்விடம் "காளிதாஸன்" பற்றிக் கூறவேண்டிய செய்தி ஒன்று உண்டு. "காளிதாஸன்" என்பது அச்சொல்லால் குறிப்பிடப்படும் கவியின் சொந்தப் பெயரே அதுதானா? வேறு பெயர் ஏதும் உண்டா என்பது தெரியவில்லை. ஆனால் "காளிதாஸன்" என்ற ஸம்ஸ்க்ருதச் சொல்லைக் கொண்டு, காளி தேவியின் அருள்பெற்றவன் — "காளிதேவியின் அடிமை" என்றுதான் பொருள் சொல்லப்படுகிறது. உண்மையில் காளிகாதேவியின் தாஸன் என்று இருக்குமானால் அக்கவி தன் இலக்கியங்களில் காளிதேவி பற்றி எங்கேயாவது குறிப்பிட்டிருப்பார். அப்படி ஏதும் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. "சியாமளா தண்டகம்" தவிர தேவி பற்றி ஏதும் இயற்றியதாகத் தெரியவில்லை. தவிர ஸம்ஸ்கிருதச் சொல்லான காளி எனும் சொல் நெடிலாகத் தான் சொல்லப்படவேண்டும். குறிலாகச் சொல்லப்படுவதில்லை. சொல்வது தவறும் ஆகும். ஆனால் பன்னெடுங்காலமாக "காளிதாஸ:" (कालिदासः) என்று குறிலாகத்தான் சொல்லப்பட்டு வழக்கில் இருந்து வருகிறது, "காளீதாஸ:" (कालीदासः) என்று சொல்லப்படுகிறதில்லை. ஒரு ஸம்ஸ்க்ருத மஹாகவியின் பெயரையே பிழைபடச் சொல்வது சரியா! என்று சிந்தித்தால், அக்கவி காளிகாதேவியின் தாஸன் அல்ல. காலகாலனாகிய சிவபெருமானின் மைந்தன் கந்தப்பெருமான். தசரத–தசரதன் - தாசரதி என்பதுபோல், காலன்–"காலி" காலனுடைய குமாரன் - காலி - முருகன், தாஸன் - அடிமை, "முருகனடிமை" என்று பொருள் கொள்வதுதான் சரியாக இருக்கும் என்று எனது பேராசிரியர் காலஞ்சென்ற பண்டிதராஜ சுப்ரமண்ய சாஸ்திரிகள் கூறியதை இங்கு நினைவு கூர்கிறேன். எனவேதான், அக்கவி குமாரஸம்பவம் எனும் நூலைத் தன் வழிபடு தெய்வத்தின் (முருகன்) பெயரால் ஒரு காவியம் இயற்றியுள்ளார்.

காளிதாஸனின் இலக்கியங்களில் சொற்பிழை கண்டுபிடிக்க இயலாது. ஆனால் அக்கவியே ரகுவம்சத்தில் ஒரு உவமையைக்கூற வந்து இலக்கணப் பிழையுடன் ஒரு சொல்லை ப்ரயோகம் செய்திருக்கிறார்.

அயோத்தியில் ஸ்ரீராமனின் முடிசூட்டு விழா சிறப்பாக நடந்து சில ஆண்டுகள் கழிந்தன. ராமன் தன் நாட்டில் தனது ஆட்சியில் குறைபாடு ஏதும் உள்ளதா? குடிமக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றனவா! குடிமக்கள் குறையின்றி மனநிறைவுடன் வாழ்ந்துவருகிறார்களா? என்பதனை அறிய ஒற்றர்களை நாடு முழுவதும் அனுப்பிச் செய்திகளை அறிந்து ஆட்சி புரிந்த நேரம் அது. ஒருநாள் (துர்முகன் எனும்) ஒரு ஒற்றன் கூறிய செய்தி ராமன் மனதைப் பேரிடியாகத் தாக்கியது.

இதனைக் காளிதாஸன் பின்வருமாறு கூறுகிறார்:

अयोघनेन अय इव अभितप्तं वैदेहिबन्धोः हृदयं विदद्रे ॥

அயோகனேன அய இவ அபிதப்தம் வைதேஹிபந்தோ: ஹ்ருதயம் விதத்ரே ॥

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

நன்றாகச் சிவக்கக் காய்ச்சப்பட்டிருக்கும் இரும்பின்மீது செம்மட்டியால் அடித்தால் எப்படி காய்ச்சப்பட்ட இரும்பு நாற்புறமும் சிதறுமோ, அவ்விதம் ராமனின் இதயமும் அச்செய்தியைக் கேட்டதால் சிதறியது.

ராமனுடைய மனதிற்குப் பழுக்கக்காய்ச்சப்பட்ட இரும்பினை ஒப்பிடுகிறான். ஒற்றன் கூறிய செய்தி செம்மட்டி அடி போன்றது. சிதறுதல் இரண்டிற்கும் உள்ள பொது தர்மம். ''போல்'' என்ற சொல் உவமையைப் விளக்கும் சொல்.

சீதையை ராவணன் தூக்கிச்சென்ற நாள் முதலாகவே ராமனுடைய மனதில் துயரம், இயலாத்தன்மை, அவமான உணர்வு ஆகியவை இடம்பெற்று இருந்தன. தன் குலத்திற்குப் பெரிய இழுக்காகிவிட்ட அந்த நிகழ்ச்சி ராமனின் மனதைவிட்டு அகலவே இல்லை. வெளியுலகிற்கு நிறைந்த மனத்துடன் இருப்பதுபோல் தோன்றினாலும், சூரிய குலத்திற்குப் பன்னெடும் காலம் வரையில் நிற்கப்போகும் அவமானத்தை எண்ணி எண்ணிப் பிறர் அறியாவண்ணம் தன் மனதிற்குள் வேதனைப்பட்டுவந்திருக்கிறான். ''இது போல் ஒருநாள் ஏதேனும் ஏற்படலாம்'' என்று எண்ணித்தான், இலங்கையில் சீதையை ''அக்னிப்ரவேசம்'' செய்ய அனுமதித்தான். ஆனால் அது நடந்தது வானரர்கள், அரக்கர்கள் நடுவில்தானே! இன்று அயோத்தி மக்களுள் ஒருவன் மனதில் ஏற்பட்ட சந்தேகம், பலரிடையே பரவ எத்தனை நேரமாகும்! இந்த எண்ணம், ராமன் பலகாலமாகவே துயரவயப்பட்டுவந்த மனதைப் பெரிதும் பாதித்துவிட்டது. இங்கு ராமனின் இதயத்தில் ஏற்பட்ட துயரத்தின் வேகம், ராமனாகவே இருந்த கவி காளிதாஸனையும் பாதித்துவிட்டிருக்கிறது. எனவேதான் **जानकीरामः, लक्ष्मीपतिः जानकीपरिणय** என்பது போன்று '' **वैदेहीबन्धोः** '' ''வைதேஹீ பந்தோ:'' என்று நெடிலாக 'வைதேஹீ' என்று நெடில் ஈயில் முடியும்படி சொல்லவேண்டியதிருக்க இலக்கண விதிகளுக்கு மாறாக ''வைதேஹி'' என்று குறில் 'இ' எழுத்தில் முடியுமாறு எழுதிவிட்டிருக்கிறான், இலக்கிய நாயகன் எந்த மனநிலையில் இருந்திருக்கிறானோ, அதே மனநிலையில் காளிதாஸ கவியும் இருந்திருக்கிறான் என்பதைத் தவிர இந்த இலக்கணப் பிழைக்கு வேறு என்ன காரணம் கூறமுடியும்!

''**अपि माषं मषं कुर्यात् छन्दोभङ्गं न कारयेत्** — ''அபி மாஷம் மஷம் குர்யாத் ச்சந்தோ பங்கம் ந காரயேத்'' என்று ஒரு பழமொழி உண்டு. செய்யுளில் சந்தம் பாதிக்கப்படுமாகில் சொல்லில் சிதைவு செய்வதில் பிழையில்லை என்பது இதன் பொருள். ஆனால் மகாகவி காளிதாஸனுக்கா சொல் பஞ்சம்! அதே இடத்தில் **सीताभिरामस्य** என்ற சொல்போல் ஒரு சொல்லை சந்தம் பிழைபடாதபடி சேர்க்க இயலாதவனா காளிதாஸன். அச்சமயம் உணர்ச்சி வேகத்தில் தோன்றிவிட்ட சொல் 'வைதேஹி' என்பதுதான். பிழைபடாதபடி சேர்க்கத் தெரியாதவனா காளிதாஸன்! இந்த கட்டத்தை எழுதும் சமயத்தில்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

"கருணரஸம்" காளிதாஸனுக்கு இந்தச் சொல்தானே தோன்றச் செய்தது. அவன் என்ன செய்வான்? இலக்கணத்தைப் பெரிதாக மதிப்பவர்களுக்குக் காவியச்சுவை உணர்வு இருப்பதில்லையாதலின் அவ்விடத்தில் அது இலக்கணப் பிழையுள்ளதாக இருப்பின் இருந்துவிட்டுப் போகட்டும்.

பொதுவாக காளிதாஸனின் கவிதைகள் பற்றி இப்படி ஒரு பழமொழி உண்டு.

"अमृतेनेव संसिक्ताः चन्दनेनेव चर्चिताः ।
शीतांशुकिरणैर्घृष्टाः कालिदासस्य सूक्तयः ॥

காளிதாஸனின் ஸூக்திகள் (காவியச் சொற்கள்) அமுதத்தில் தோய்க்கப் பட்டவை போன்றும், நறுமணச் சந்தனம் பூசப்பெற்றது போலவும், சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் சேர்ந்துப் பிசையப்பட்டவை போலவும் இருக்கும் என்பது இதன் பொருள்.

ஸம்ஸ்க்ருதத்தில் சொல் என்ற பொருளைக் குறிக்கும் சொற்கள் ஏராளம். वाक् – सूक्ति – वचनं – उक्ति – कथनं – कथितं என்றவாறு பல சொற்கள் உண்டு. இதுபோல் பால் எனும் பொருளைக் குறிப்பிட க்ஷீரம்–துக்தம்–பய क्षीरं — दुग्धं — पयः என்று பல சொற்கள் உண்டு. பெரும் பசுக்கள் கறவை நேரம் நெருங்கியும் கறக்கப்படாதபோது தாமாகவே பாலைச் சுரந்துவிடும். அதுவே க்ஷீரம் ஆகும் மற்றவரால் கறக்கப்பட்டது பால் துக்தம் (दुग्धं) எனப்படும். இப்படி பல வித்தியாசமான சொற்கள் உண்டு.

ஸம்ஸ்கிருத இலக்கியங்கள் பற்றி:

ஸம்ஸ்கிருத இலக்கியம் பொதுவாக இருவகைப்படும். 1. श्रव्यकाव्यम् 2. दृश्यकाव्यम् ॥ முழுவதும் செய்யுள் வடிவாகவே இருப்பது "ச்ரவ்ய" (श्रव्य पद्य) காவியம் என்றும், மேடையில் பாத்திரங்கள் நடிப்பதைப் பார்த்தும் பேசுவதைக் கேட்டும் மகிழும் விதத்தில் பாத்திரப்படைப்புகள், சம்பாஷணைகள் வடிவில் அமைந்தது த்ருச்ய (दृश्य) காவ்யம் என்றும், செய்யுள் உரைநடை கலந்தது "சம்பூ"காவியம் என்றும உரைநடை மட்டும் உள்ளது கத்ய (श्रव्य गद्य) காவியம் என்றும் வழங்கப்படும்.

க்கண்ட (KHANDA) காவியம் :- "खण्ड काव्यं भवेत् काव्यस्यैकदेशानुसारि च ॥ என்பது க்கண்ட காவிய லக்ஷணமாகும். இதில் மஹா காவியங்கள் போல் நீண்ட கதைப்பகுதி இருக்காது. அளவும் சிறியது. விஷயங்களும் குறைவாகவே இருக்கும். சூரிய சந்திர உதயம், கடல்-நகரம் போன்றவற்றின் வருணனை இருக்காது. ஒரு சிறு விஷயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வருணிப்பது மட்டுமேயாகும். இவ்வரிசையில் (க்கண்டகாவிய வரிசையில்) காளிதாஸனின் "மேகஸந்தேச"மும் "ருதுஸம்ஹார"மும் அடங்கும்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஆனால் காளிதாஸனின் ராக்ஷஸ காவியம் ஒரு கவி எவ்வாறு இலக்கியம் எழுதக்கூடாது என்பதற்குச் சான்றாக அமைந்தது. (ராக்ஷஸ காவியத்தை காளிதாஸன் எனும் பெயரில் வேறு யாரோ ஒருவர் எழுதியிருக்கலாம் என்ற வாதமும் உண்டு) மேகசந்தேச காவியம் 'कश्चित् कान्ताविरह-गुरुणा' என்று ஆரம்பிப்பதுபோல் ராக்ஷஸ காவியமும் 'कश्चित् वनं बहुवनं' என்று தொடங்கியிருக்கிறது.

காளிதாஸனின் மேகஸந்தேச காவியம் சுவைக்கச் சுவைக்கத் திகட்டாத வருணனைகள் அமைந்தது.

"மேகசந்தேச" காவியத்தில் ஆரம்பமாகும் விஷயம் :

ஒரு யக்ஷன் (குபேரனின் பணியாள்) அவனுடைய பெயர் ஏதும் தரப்படவில்லை. குபேரனுடைய அரண்மனையில் பணி செய்துவந்த அந்த யக்ஷன் தன் கடமையில் கவனக் குறைவாக இருந்தமைக்காக குபேரனுடைய சாபத்தால் ஓராண்டுகாலம் அவனுடைய தெய்வீக சக்தியை அவன் இழந்து இளம் காதலியைவிட்டுப் பிரிந்து 'ராமகிரி' எனும் இடத்தில் வசிக்க நேரிட்டு பல மாதங்கள் ஓடின. அவன் காதல் நோய் காரணமாக உடல் மெலிந்துவிட்டான். இக்காலம் போல் அக்காலத்தில் செய்தியனுப்ப வசதிகளா ! எனவே யோசித்தான். காதல் உணர்வின் காரணமாகத் தாம் செய்வது சரியா பொருத்தமற்றதா என்று பகுத்தறியும் நிலையில் அப்பொழுது அவன் இருக்கவில்லை. அச்சமயம் வெளியே மேகங்கள் மழைக்காலத்தை அறிவுறுத்தும் முகமாகப் பரவி நின்றன. தென்திசைக் காற்று வீசுவதால் மேகக் குவியல்கள் வடதிசை நோக்கிச் செல்வதைக் காண்கிறான். மிக நெடும் தொலைவில் காதலியிருந்ததால் அவனுடைய காதல் உணர்வு அவனை மேலும் துயருறச் செய்கிறது. அந்த மேகத்தின் மூலமாகவே தன் காதலிக்குச் செய்தியனுப்ப முடிவு செய்கிறான். மேகம் என்பது ஜடப் பொருளாயிற்றே, இடம். காலமறிந்து திறமையுடன் செய்திகளைச் சொல்லும் தகுதி. நல்ல அறிவாற்றல் உடையவர்களுக்குத்தானே உண்டு. நாம் எண்ணும் பணியை இந்த மேகம் செய்யக் கூடியதா என்று அவன் நினைத்தானில்லை ஏன் தெரியுமா !

"कामार्ता हि प्रकृतिकृपणाश्चेतनाचेतनेषु"

காமவயப்பட்டவர்கள் இயல்பிலேயே எதிரில் உள்ளது ஜடப்பொருளா அறிவுள்ள சேதனப்பொருளா (அறிவுள்ளதா) என்ற விவேகம் இல்லாமல்தான் இருப்பார்கள் (உதாரணமாக ராமாயணத்தில் ஸ்ரீராமனே வீசும் தென்றலைப் பார்த்து "ஏ காற்றே நீ இங்கு என் மீது வீசுவது இருக்கட்டும். ஒரு உதவி செய்வாயா ! நேராக இலங்கைக்குச் செல் அங்கு அசோகவனத்தில் என் ஸீதை இருப்பாள். நீ அவளைத் தொட்ட (ஸ்பர்சித்த) கையோடு நேராக இங்குவந்து என்மீது வீசு. என்னைத் தொடுவாயாக என்று கூறுகிறான்.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

" वाहि वात यतः कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश "

" வாஹி வாத யதஹ் காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருச "

இராமாயணத்தில் சீதையை பிரிந்த ராமனின் நிலையே இந்த மேகஸந்தேச காவியத்தை காளிதாஸன் எழுதக் காரணமாவ மூலக்கரு எனப் பலர் பலவித மாகக் கூறுவர். ஸீதையைப் பிரிந்த துயரத்தில் ராமன் தன் சுய நினைவின்றி மழைக்கால மேகத்தைக் கண்டதும் காதல் நோய் மிகுதியால் மேலும் துயர்வயப்படுகிறான் என்ற நிலையை மனதில் கருவாகக்கொண்டு இந்த மேகசந்தேச காவியத்தை இயற்றியிருக்கலாம் என்பதும் ஒரு சாரார் கூறும் கருத்தாகும். எனவேதான் மேகஸந்தேச காவியத்திற்கு உரை எழுதிய மல்லிநாதஸூரி என்பவர்

सीतां प्रति हनुमत्सन्देशं मनसि निधाय मेघसन्देशं कविः कृतवान् इत्याहुः

என்று கூறுகிறார். கிஷ்கிந்தை மலைக்குகையில் தங்கியிருந்த ராமன் மேகத்தினைக் கண்டதும் சீதையின் நினைவு பிரிவுத் துயரத்தை அதிகமாக்குகிறது. அனுமனை சீதைக்கு தூதனாக அனுப்பிய அந்த நிலையைக் கருவாகக் கொண்டு இக்காவியத்தை இயற்றியிருக்கலாம் என்று சிலர் கூறுவர் என்று மேகசந்தேச காவியத்திற்கு உரை எழுதிய மல்லிநாதஸூரி என்பவர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறான தோற்றுவாய் கொண்ட இந்தக் காவியத்தினை காளிதாஸன் இயற்றிய நாட்களில் ஒரு இலக்கிய ஆர்வம் மிக்க ஒரு பெண்மணி அவனை ஆதரித்து வேண்டியவற்றைச் செய்துகொடுத்து வந்தாள். அதற்குக் காளிதாஸன் கொடுத்த விலை என்ன தெரியுமா? தினம் ஒரு மேகஸந்தேச ச்லோகம் எழுதப்பட்ட ஓலைதான். அப்பெண்மணி அந்த ஓலையில் எழுதப் பட்ட ச்லோகத்தின் பொருளை - கருத்தை ஊன்றிப் படித்து இன்புறுவாள்.

பூர்வமேகம், உத்தரமேகம் என்ற இரு பிரிவுகளைக்கொண்ட அந்தக் காவியத்தின் (பூர்வமேகம் — முற்பகுதியில் 66 ச்லோகங்கள் உண்டு) அவை யாவும் தென்திசை தொடங்கி இமயம் வரையிலான (பூகோள சம்பந்தமான) இயற்கைக் காட்சிகளைப் பற்றியதாகவே இருக்கும். இடையில் ஒருசில இடங்களில் காதலின் பிரிவாற்றாமைத் துயரத்தை வெளிப்படுத்தும் கருத்துக் களும் இருக்கும். ஆனால் அப்பெண்மணிக்கு அந்த வருணனையில் சலிப்பு ஏற்பட்டபொழுது ஒருநாள் காளிதாஸனிடம் தன் மனதில் உள்ளதை வெளியிட்டாள். அதற்குக் காளிதாஸன் கூறியதாவது :- "பெண்ணே! கடுமையான தண்ணீர் தாகம் எடுத்தவன் ஒருவன் குளிர்ந்த சுவைமிக்க நீர் வேட்கையுடன் வருகிறான். அவனுக்குக் குளிர்ந்த சுவைமிக்க நீர்தான் தேவை. ஆனால் அவன் கண்டதோ ஒரு குளம். அதற்கு 66 படிகள் உண்டு. அவன் அந்தப் படிகளைக் கடந்தால்தான் சுவைமிக்க குளிர்ந்த நீரைப் பெற

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

முடியும். அதுபோல் இந்தக் காவியத்தின் முற்பகுதி முடிவுவரை பொருத்திரு. இரண்டாம் பகுதி தொடங்கும் காலத்தில் சுவைமிக்க சுலோகங்களைப் பெறலாம்" என்று கூறியதாக காலங்காலமாக வழங்கப்படும் கருத்து ஒன்று உண்டு.

அதற்கேற்ப இரண்டாவது பகுதியிலும் அந்த யக்ஷன் தன் காதலிக்கு அனுப்பும் செய்தி விரிவாகக் கூறப்படவில்லை. ஆனாலும் கவி, மேகத்திடம் கூறும் ச்லோகங்களின் கருத்து சுவை மிக்கதாகவே இருக்கும்.

"அளகாபுரி" நகர வீடுகளில் நடக்கும் இனிய சிருங்காரச் சுவைமிக்க நிகழ்ச்சிகளைக் கவி வருணிக்கும் விதம் மிகமிக உயர்வாக இருக்கும். அவற்றில் ஒன்றினை நாமும் காணலாமே!

ஏ மேகமே! நீ அளகாபுரி நகரின்மீது செல்லும் சமயம் பல மாளிகைகளின் மேல் தளங்களில் பல அரிய இனிய காட்சிகளைக் காணும் அரிய சந்தர்ப்பம் உனக்கு ஏற்படும்.

ஓரிடத்தில் காதலன், தன் காதலியுடன் உறவாடும்பொழுது காதல் உணர்வு மிகுதியால் தம் கைகளைக் காதலியின் உடல்மீது உறவாடச் செய்து கொண்டே கொவ்வைப்பழம் போன்ற சிவந்த பளபளப்பான உதடுகளை உடைய காதலியின் இடைமுடிச்சை (नीवी-बन्ध)[1] அவிழ்ப்பதில் காதலனின் கைகள் ஈடுபடும். அக்கைகள் தம் செயலில் வெற்றியும் பெற்றுவிடும். அவ்விளங்காதலியும், காதல் உணர்வில் மயங்கிய நிலையில் காதலனின் செயலைத் தடுக்கமுடியாமல், அனுமதிக்கவும் முடியாமல் தவிக்கும் நிலையில் மண்டபத்தில் வீசும் வைரக்கற்கள்மயமான விளக்குகளின் பேரொளி அந்தக் காதலியைப் பெரிதும் வெட்கமுறச் செய்யும். விளக்கை வாயால் ஊதினால். அவை அணைந்துவிடுகின்றனவா! அவை எண்ணெய் விளக்கல்லவே! எனவே [2]விளக்குகளை அணைக்கும் முயற்சியாக அருகிலுள்ள குங்குமத்தை இரு கைகளாலும் எடுத்து அவ்விளக்குகளின் மீது போடுவாள். ஆனால் அவ் விளக்குகள் அணையாமல் இப்பொழுது சிவப்பு நிற ஒளியைப் பரவச்செய்வதாக இருக்கும். அறை முழுதும் சிகப்புநிற ஒளி பரவி இருக்க, அக்காதலியின் முயற்சி பயனற்றதாக ஆகிவிடும். அந்த அரிய காட்சியை நீ அங்கு காண்பாய் என்றவாறு மேகத்திற்கு உற்சாகமூட்டும் விதத்தில் பேசும் யக்ஷன், தன் காதலிக்குச் சொல்லும் செய்திகள் மிகமிகக் குறைவுதான்.

---

1. नीवी-बन्ध — A cloth worn round a woman's weist or more properly the ends of the cloth tied into a knot infront, the knot of the wearing garment.

2. வைர விளக்குகள் — தீச்சுடர் ஏற்றி எரியச் செய்யப்படுபவை அல்ல. ஒளி உமிழும் வைரக்கற்களே விளக்குகளாக உள்ளன.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்வாறு இனிய வருணனைகளைக் கீழே சொல்லப்பட்டவாறு இனிய சொற்களால் (எளிதில் பொருள் கொள்ளும் விதத்தில்) கூறும் இயல்புள்ள காளிதாஸன் "இரும்புக்கடலை" போன்று எளிதில் பொருள் விளங்காத சொற்களைக் கொண்டும் ஒரு காவியம் படைத்திருக்கிறதாய்ச் சொல்லப் படுகிறது. "ராக்ஷஸ காவியம்" என்பது அதன் பெயர். இக்காவியம் 20 ச்லோகங்களை மட்டும் கொண்டது. कश्चित् कान्ता...... என்று தொடங்கி எழுதப் பட்ட 'மேகஸந்தேசம்' போலவே कश्चिद्वनं எனத் தொடங்கும் இந்த ராக்ஷஸ காவியத்திலும் வருணனை உண்டு. ஆனால் அவ்வர்ணனைகளை உரை இன்றி அறிவது எளிதல்ல.

இலக்கியங்களில் नैषधं विद्वदौषधं என்று சொல்லப்படுவதுண்டு. ஸ்ரீ ஹர்ஷ மஹாகவி எழுதிய நைஷத மஹாகாவியம் பேரறிஞர்களுக்கும் "மருந்தாக" இருக்கும். மருந்துகள் பொதுவாக இனிப்புடன் இருப்பதில்லை. ஆனால் இந்த ராக்ஷஸ காவியத்தில் உள்ள 20 ச்லோகங்களையும் படித்தால் கடைசி 20வது ச்லோகம் மட்டும் "இவ்வாறு கூறிவிட்டு அந்த வாலிபன் அவனுடைய மனதிற்குப் பிடித்தமானவளுடன் மகிழ்ந்திருந்துவிட்டு நான்கு காளைகள் பூட்டிய வண்டியில் ஏறி தன் வீடு சென்றான்" என்று எளிதில் பொருள்கொள்ள முடிகிறது. அவ்வாலிபன் அவளிடம் என்ன சொன்னான் என்பது பற்றிக் கூறும் மற்ற ச்லோகங்கள் மிகவும் கடினமான பிரஸித்தமில்லாத சொற்களால் இரு (பல) பொருள் உள்ள சொற்களால் அமைந்துள்ளன. முதல் ச்லோகமே "மேகஸந்தேசம்" போல் कश्चिद्वनं என்று தொடங்குகிறது.

कश्चिद्वनं बहुवनं विचरन् वयस्थो
वश्यां वनात्मवदनां वनितां वनाद्रीम् ।
तर्व्यर्यरिप्रदमुदीक्ष्य समुत्थितं खे
ना गामिमां मदकलः सकलां बभापे ॥ १

அன்வயம் (Prose order):

कश्चित् मदकलः वयःस्थः ना, बहुवनं वनं विचरन्, वनाद्रीं वनात्मवदनां वश्यां वनितां उदीक्ष्य खे समुत्थितं तर्व्यर्यरिप्रदं च उदीक्ष्य सकलां गां बभापे ।

ஒரு வாலிபன் வயதிற்கு வந்த வாலிப வயதில் உள்ள ना--புருஷன், அவன் யாரோ! பெயர் ஏதும் குறிப்பிடப்படாதவன் मदकल: - வாலிபமதத்தால் அழகானவன் அல்லது மகிழ்ச்சியுடன் உள்ளவன் அல்லது மது அருந்திய நிலையில் இன்னது பேசுகிறான் என்று எல்லோரும் கேட்கும் விதத்தில் இல்லாமல் பேசுகிறவன், அவன் वनं-காட்டில், எப்படிப்பட்ட காடு என்றால்,

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

वहुवने - மிகுந்த நீர் நிலைகள், அருவிகள், ஆறுகள் சூழ்ந்த காட்டில், **विचरन्** — குறிக்கோள் ஏதுமில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கிறவன். (அங்கு) **वनितां** - ஒரு பெண்ணை (வனிதை என்ற சொல் — வயதிற்குவந்த பெண்ணையே குறிக்கும்) அவள் **वश्यां** - இந்த வாலிபனுக்கு வயப்பட்டவள். மேலும் **वनात्मवदनां वन** - நீரை **आत्मा** — உடலாக உடைய சந்திரன் (சந்திரன் கடலிலிருந்து தோன்றியவன் அல்லவா!) அதுபோன்ற **वदन** — முகத்தை உடைய பெண்ணை. அப்பெண் மேலும் **वनार्द्रां** - மழை நீரால் நனைந்திருக்கிறாள். (இதிலிருந்து அப்பெண்ணின் உடல் அழகு நிலைபற்றிக் கூறவேண்டியதில்லை.) மது அருந்திய வயதிற்கு வந்த வாலிபன், தன்னிடம் வயப்பட்ட பெண்ணைப் பார்க்கிறான். அவளுடைய ஆடைகள் நனைந்திருக்கின்றன. ஏன் தெரியுமா? **खे** - வானத்தில் **समुत्थितं** - எழுந்துவந்த. **तर्वग्र्यरिप्रदं** (तरु + अरि + अरि प्रदं) காட்டு மரங்களுக்குப் பகை தீ—நெருப்பு, அதற்குப் பகையாக உள்ளது நீர். அதை (நீரை) தருகின்ற மேகத்தை மேல்நோக்கிப் பார்த்துவிட்டு **वभाषे** — பேசுகிறான். பேசியது என்ன? **गां** — வார்த்தையை, எப்படிப்பட்ட வார்த்தையாம் **सकलां** - எல்லாமே பேசுகிறான் அல்லது அழகுடன் — இலக்கிய அழகுடன் கூடிய **गां** - வார்த்தையைப் பேசுகிறான். அவன் பேசியது என்ன என்பது அடுத்துவரும் ச்லோகங்களில் தொடருகிறது.

இந்த ச்லோகத்தில் **वनं**, **वहुवने**, **वनात्मवदनां**, **तर्वग्र्यरिप्रदं** என்ற சொற்கள் எளிதில் பொருள் கொள்ளத்தக்கவையன்று.

पश्याब्जदृक् गिरितटेषु कुमातृसाह्वान्
भूदेवराजरिपुशत्रुसमावधूतान् ।
वैश्वानरारिजरिपुघ्नशराभिभूतैः
दृक्श्रोत्रशत्रुभिरुपाश्रितपुष्पशोभान् ॥ २

அன்வயம் (Prose order) :

हे अब्जदृक्, पश्य, भूदेवराजरिपुशत्रुसमावधूतान्, वैश्वानरारिजरिपुघ्नशराभिभूतैः दृक्श्रोत्रशत्रुभिः उपाश्रितपुष्पशोभान् कुमातृसाह्वान् पश्य ।

ஏ தாமரை (இதழ்) போன்ற கண்களை உடைய பெண்ணே! அதோ பார். **भूदेवराज** சந்திரன் - அவனுக்கு **रिपु** பகைவன், மேகம். வானில் சந்திரனை மறைக்கிறபடியால் மேகம் சந்திரனுக்கு சத்ரு. அதற்கு (அந்த மேகத்திற்கு) சத்ரு - காற்று. (மேகங்களை கலைத்துவிடுகிற காரணத்தால்) அக்காற்றினால் **समावधूतान्** - அசைக்கப்படுகிற, **कुमातृसाह्वान्** — தரம் குறைந்த. **कुत्सित** - என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சொற்கள், **कु**, **कद्** என்ற

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

சொற்களாகும். (உதாரணம் कोष्णं कवोष्णं मन्दोष्णं कदुष्णं) माता என்ற சொல்லுக்கு தாய் என்பது பொருள். अम्बा, என்ற சொல்லும் தாயைக் குறிக்கும். कुमातृ कद् + अम्ब (கதம்ப) कदम्ब என்பது ஒருவகை மரத்தின் பெயர். காற்றினால் அசைக்கப்படுகிற கதம்ப மரங்களைப்பார். அவை எப்படிப்பட்டவை? पुष्प-शोभान् மலர்களால் அழகுற விளங்குபவை. மேலும் दृक् श्रोत्र शत्रुभिः उपाश्रित= दृक् கண்களை श्रोत्र காதுகளாகக் கொண்ட (கண்களையே காதுகளாகக் கொண்டவை) பாம்புகள். அவற்றுக்கு சத்ரு மயில்கள். மயில்கள் கதம்ப மரத்தின் மீது அமர்ந்ததாலும் அம்மரங்களில் மலர்கள் பூத்திருப்பதாலும் அழகுடன் விளங்குகின்றன கதம்ப மரங்கள். அந்த மயில்கள் எந்த நிலையில் உள்ளன. वैश्वानर-अरि-ज रिपु घ्न शराभिभूतः वैश्वानर = அக்னி (அதற்கு) अरि சத்ரு (பகை)= நீர் ज (அதில்) உண்டாகும் மீன்கள். रिपु அவற்றின் சத்ருக்கள். மீன்களைக் கொல்லும் ஒருவகைப் பறவைகள். அவற்றை हन् கொல்லுகிறவன் மன்மதன். (மன்மதனுடைய கொடியிலுள்ளவை மீன்கள் அல்லவா. அவற்றைக் கொல்லும் பறவைகளை தன் கொடிச் சின்னமான மீன்கள்மீதுள்ள கருணையால் கொல்பவன் மன்மதன். அவனுடைய शर பாணங்களால் अभिभूत தாக்கப்பட்ட நிலையில் மயில்கள் உள்ளனவாம். மயில்கள் மன்மத பாணத்தால் அடிக்கப்பட்ட நிலையில் தம் பேடைகளுடன் இணைவதற்காகக் கதம்ப மரத்தின் மீது ஏறி அமர்ந்துள்ளன. அதுவும் கண்களுக்கு இனிமையாகவுள்ளது. மரத்தில் மலர்கள் மிகுந்திருப்பதும் கண்களுக்கு இனிமையாகவுள்ளது. அப்படிப்பட்ட கதம்ப மரங்களைப் பார். என்று தன் காதலியிடம் கூறினான் அந்த வயதிற்கு வந்தவன். இதிலும் பல சொற்கள் எளிதில் பொருள்கொள்ள இயலாதபடி அமைந்துள்ளன.

पश्याब्धिसारसदृशाभिरभू(मी)भिरद्भिः
आप्लावयत्ययमरगुप् धरणीमहिघ्नः ।
अब्दः सिताभिरसितः शबलः खगाभिः
वाजैः सितैरिव विभाति वनप्रबुद्धैः ॥ ३

அன்வயம் (Prose order):

हे वनिते, अमरगुप्, अब्धिसार सदृशाभिः अभूभिः अद्भिः धरणीं आप्लावयति-(सः अमरगुप्) कथं भूतः अहिघ्नः अहिं वृत्रासुरं हन्तीति अहिघ्नः ॥ "सर्पे वृत्रासुरेऽप्यहिः" इति वैजयन्ती ॥ अपो ददाति इति अब्दः मेघः सिताभिः शुभ्राभिः खे आकाशे गच्छन्तीति खगाः ।

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

ताभिः बलाकाभिः शबलः शबलीकृतः विभाति शोभते । (सः मेघः) कथं भूतः असितः कृष्णः कैरिव शबलीकृतः विभाति, वनं उदकं तत्र प्रवुद्धैः विकसितैः सितैः शुभ्रैः वारि उदके जातैः कमलैरिव ॥

ஏ பெண்ணே! अमरगुप् अमरान् गोपायति इति தேவர்களின் பாதுகாவலன் இந்திரன். அவன் கடல் நீருக்குச் சமமான மிகுந்த நீரினால் இந்த பூமியை வெள்ளக்காடாக்குகிறான். அந்த இந்திரன் எப்படிப்பட்டவன் தெரியுமா! अहिघ्न: अहि என்பதற்குப் பாம்பு என்றுதான் பிரசித்தமான பொருள். घ்न கொல்லுகின்ற பாம்புகளைக் (கொல்லுகிற என்ற விசேஷணம் - Adjective) இந்திரனுக்குப் பொருந்தாது என்ற நிலையில் अहिघ्न: என்ற விசேஷணம் தரப்பட்டுள்ளதே என்றால் अहि என்பதற்கு விருத்ராசுரன் என்றும் பொருள் உண்டு என்பதாக "வைஜயந்தீ" எனும் நிகண்டு நூலில் கூறப்பட்டுள்ளது. ஆதலின் விருத்ராசுரனைக் கொன்ற இந்திரன் என்பது பொருத்தமாகிறது. இதை விரோதாபாஸ அலங்காரம் என்றும் சொல்வதுண்டு. இந்த अब्द, अप: ददाति इति अब्दः மேகம் अब्द: என்ற சொல் சாதாரணமாக வருடம் = $365\frac{1}{4}$ நாட்கள் கொண்ட — காலம் என்பதே பிரசித்தமாக வழங்கப்படுகிறது அச்சொல்லை (यौगिकமாக) अप् + द என்று பிரித்தால் நீரைத்தருகிற 'மேகம்' என்று பொருளைத் தருகிறது. அந்த மேகம் கருநிறத்துடன் இருந்தாலும் அதன் அடியில் வானத்தில் எண்ணற்ற நாரை போன்ற பறவைகள் பறக்கிறபடியால் மேகமே பொன்னிறமாக்கப்பட்டதாகக் காட்சியளிக்கிறது.

அதனை உவமையால் விளக்கிகுறார் கவி. நீர்நிலையில் நீர் கருநிறம் உள்ளதாகத்தான் தோற்றமளிக்கும். அதில் மலர்ந்த வெண்தாமரைகள் சூழ்ந்திருந்தால் எவ்வாறு காட்சி தருமோ அதுபோன்று வானம் காட்சி தருகிறது என்று கூறுகிறார்!

இந்த ச்லோகத்தில் अहि என்ற சொல்லும் अब्द என்ற சொல்லும் वाजः वारि जायन्ते इति वार्जानि तैः நீரில் உண்டாகும் தாமரைகள் என்ற சொற்கள் எளிதில் பொருள் காண இயலாதவை. இவற்றிற்குப் பொருள் தெரியாத வரையில் ச்லோகத்தின் பொருள் முழுமையாக அறிய இயலாததாக இருக்கும்.

गोष्ठं घृतं सुघृतवद्भिरमीभिरग्र्यं
गोभिः समुद्धरति यद् बहुधा हिमघ्नः ।
तद् गव्यमम्बरगतं शिखिजातसंस्थ
विस्पन्दमानं अभिवर्धयतीह गोजान् ॥ ४

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அந்வயம் (Prose order)

हिमघ्नः सुघृतवद्भिः अमीभिः गोभिः यत् अग्र्यं गोष्ठं घृतं समुद्धरति तत् शिखिजात्मसंस्थं अम्बरगतं गव्यं विस्पन्दमानं सत् इह गोजान् अभिवर्धयति ॥

तत् गोषु भवं गव्यं रश्मिजं नीरं, इह भूमौ गवि भूमौ (जान्) जातान् । तृणादिपदार्थान् । अभिवर्धयति — वृद्धिं प्रापयति । कथं? अम्बरे आकाशे गतं वर्तमानं, पुनः कथं भूतं? शिखी – वह्निः तस्मात् जातो धूमः सः आत्मा यस्य सः मेघः । तस्मिन् संतिष्ठन् इति तथा ॥ पुनः कथं भूतं? विस्यन्दमानं स्रवत् । तत् किं, गोष्ठं पृथिवीस्थं । घृतं— पानीयं हिमघ्नः आदित्यः बहुधा बहुप्रकारेण । सुघृतवद्भिः सूदकवद्भिः गोभिः किरणैः समुद्धरति गृह्णाति । किं भूतं घृतं? अग्र्यं श्रेष्ठम ॥

பனியைத் தன் கிரணங்களால் விலகச்செய்யும் சூரியன். அக்கிரணங்கள் எப்படிப்பட்டவை தெரியுமா ! மிகுந்த நீரைத் தன்னகத்தே கொண்டுள்ளவை) (கிரணங்களால்). [தந்த்ர சாஸ்திர முறைப்படி காலையில் குளம் அல்லது ஆற்று நீரில் மூழ்கி ஸ்நானம் செய்வோரும், கணபதி தர்ப்பணம் (சதுராவர்த்தி) செய்வோரும், சூரியனை நோக்கி பிரார்த்தனை செய்துவிட்டு 'அங்குச' எனும் முத்ரையால் சூரியனிடமிருந்து நீரைப்பெற்றுத் தம் கடமைகளைச் செய்வர். எனவே சூரியனுடைய கிரணங்களில் மிகுந்த நீர் உண்டு.] மிகச்சிறந்த பூமியில் உள்ள (நீர்நிலைகள், செடி, கொடி, மரங்களிலிருந்து) यत् गव्यं-எந்த நீரை எடுத்துக்கொள்கிறானோ. तत् - அதே நீரை, अम्बरगतं शिखिजात्मसंस्थं सत् - வானில் மேகத்தில் இருந்துகொண்டு, மழையாகப் பெய்து பூமியில் உள்ள பயிர்பச்சைகளை. மரம்-செடி-கொடிகளை வளரச் செய்கிறது. இந்த ச்லோகத்தில் घृत गव्य गोष्ठ शिखिजात्मसंस्थं गोजान् என்ற சொற்களின் பொருளை அறிவதில் மிகவும் கஷ்டம் உண்டு.

अब्रुट्पलाशनिभदृक् घनजात्मवक्त्रा
वार्चस्वरेभनिभगा गजदोःसमोरुः ।
सीरिध्वजप्रसवतुल्यविपाहृदासौ
नूा सङ्गता प्रमुदिता प्रसमीक्ष्य वार्दम् ॥ ५

हे प्रिये पश्य, असौ वनिता वाः उदकं ददाति इति वार्दः मेघः तं प्रसमीक्ष्य प्रकर्षेण मुदं इता प्राप्ता, बभूवेत्यध्याहारः । कथं भूता – अप्सु रु(रो)हति इति अब्रुट् पद्मं, तस्य

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

पलाशः पत्रं तन्निभे दृशौ यस्याः सा । पुनः कथं भूता–घनात् जातं नीरं, तत् (तदेव) आत्मा यस्य असौ चन्द्रः तेन तुल्यं वदनं यस्याः सा । पुनः कथं भूता-वारि चरति इति वार्चः हंसः तत्स्वर इव स्वरो यस्याः सा । पुनः कथ भूता - इभा गजः तन्निभं तुल्यं गच्छति (इति) इभनिभगा) पुनः कथं भूता, गजस्य दोः करः शुण्डादण्डः तत्प्रभौ ऊरू यस्याः सा । पुनः कथं भूता-सीरं हलं अस्य अस्तीति सीरी, रौहिणेयः बलभद्रः । तस्य यो ध्वजः तालः, तस्य प्रसवे फले, तत्तुल्यौ विषं पयः इति आह्वा यस्य तत् दुग्धं तत् दत्तः तौ विषाह्वदौ स्तनौ यस्याः सा तथा । सङ्कर्षणः सीरपाणिः (इत्यमरः), तालाङ्को मुसली हलीत्यमरः । ना पुरुषेण सङ्गता संयुता ॥

அன்பிற்குரியவளே! அதோ பார். அந்தப்பெண் மேகத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தவளாக இருக்கிறாள். அவள் எப்படிப் பட்டவள் என்பதனை ஆறு விசேஷணங்களால் கவி வருணிக்கிறார். தாமரை இதழைப் போன்ற கண்கள் உள்ளவள். சந்திரனுக்கு ஒப்பான முகத்தை யுடையவள், அன்னப் பறவையின் குரல் போன்ற குரல் உள்ளவள். யானை யின் நடையுள்ளவள். யானையின் துதிக்கை போன்ற துடைகளை யுடையவள். மேலும் (பலராமனின் கொடியில் இலச்சினையாக விளங்கும்) பனை மரத்தின் பழங்கள் போன்ற தனங்களையுடையவள். அவள் புருஷனுடன் இணைந் திருக்கிறாள் பார்.

இங்கு वार्द्, अब्रुट्, घनजात्मवक्त्रा, वार्च सीरिध्वजप्रसव (तुल्य) विषह्वद, ना ஆகிய சொற்கள் அதிகம் புழக்கத்தில் இல்லாதவை (அப்ரஸித்தமானவை) அவற்றின் பொருள் தெரியாத வரையில் இந்த ச்லோகத்தின் பொருளை அறிவது கடின மாகும்.

காளிதாஸன், எம்மாதிரி காவியங்களை எழுதவேண்டும் என்பதற்கு ரகுவம்சம், குமாரஸம்பவம், மேகஸந்தேசம் என்ற காவியங்களையும், விக்ரம ஊர்வசியம், மாளவிகாக்னிமித்ரம், சாகுந்தலம் எனும் நாடகங்களையும் எழுதியதுபோல் எந்த மாதிரி காவியங்கள் இயற்றப்படக்கூடாது என்பதனை அறிவுறுத்தும் முகமாகவே இந்தக் கடும் சொற்கள் அடங்கிய காவியத்தை ராக்ஷஸச் சொற்கள் அரக்கர்கள் மாயையால் பல உருவங்களை எடுக்கும் இயல்புள்ளவர்கள். உண்மை வடிவம் ஒன்றாக இருக்க மாயையால் பல வடிவங்கள் எடுக்கின்றனர்கள். அதுபோலவே இந்தக் காவியத்தில் ஒரு சொல்லின் பொருள் பழக்கத்தில் உள்ள பொருள் ஒன்றாக இருக்க. அதனை வேறு விதம் பொருள் தரும்படியாக அமைத்து இக்காவியத்தை

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இயற்றியுள்ளதால், இதனை "ராக்ஷஸ காவியம்" என்றே பெயரிட்டதாகத் தெரிகிறது. உதாரணம் वन — என்பதற்குக் "காடு" என்பதுதான் அதிகம் பழக்கத்தில் உள்ள பொருள். இங்கு वन என்பதற்கு "நீர்" என்று பொருள்தரும் விதத்தில் அமைக்கப்பட்டது. विष என்பதற்கு "உயிர்க்கொல்லி" என்றுதான் பிரசித்தமான பொருள். இங்கு "பால்" என்ற பொருளில் அச்சொல் அமைக்கப்பட்டிருக்கிறது. "नृ" எனும் சொல் மனிதன் எனும் பொருளில் பழக்கத்தில் உள்ளதுதான் नृपतिः என்பதாக. ஆனால் மூன்றாவது வேற்றுமையில் அதைத் தனிச்சொல்லாக (ना என்பதாக) உபயோகிக்கும்பொழுது, இது என்ன சொல் எனச் சற்று சிந்திக்கச் செய்கிறது. ([1]ना नरौ नरः ॥ [2]नरं नरौ नॄन् ॥ [3]ना नृभ्यां नृभिः ॥ [4]ने नृभ्यः नृभ्यः ॥ [5]नुः नृभ्यां नृभ्यः ॥ [6]नुः नोः नृणां–नॄणां ॥ [7]नरि नोः नृषु ॥ என்பதாக. இச்சொல் 7 வேற்றுமைகளில் வழங்கப்படும்.) ஆதலின் இக்காவியத்தில் வழங்கப்படுகிற பல சொற்களின் பொருத்தமான பொருளைக் காண்பதில் விளக்கமில்லாமல் (வியாக்யானம் இல்லாமல்) அறிவதற்கு ஏற்றதாக இல்லை என்பதாலேயே ராக்ஷஸ காவியம் என்பது மயக்கம் தரும் சொற்களைக்கொண்டு அமைக்கப்பட்ட சிறு காவியம் என்று பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

सूर्यांशुनाम पतिरुन्नतदृप्तगामी
वाङ्नामभिः परिवृतो विषनामदाभिः ।
उस्राचरः प्रमुदितः प्रतिनानदीति
गर्जन्तमीक्षणहितोच्चयतुल्यरूपम् ॥ ६

उस्राः गावः तासु चरति इति तथा [वृषः] गर्जन्तं ईक्षणयोर्हितं यत् कज्जलं तस्य उच्चयः समूहः तेन तुल्यं रूपं यस्य सः मेघः तं प्रसमीक्ष्येत्यध्याहारः । प्रतिनानदीति प्रतिस्पर्धितया नदति । किं भूतः सूर्यांशवो रश्मयः तन्नामतुल्यं नाम यासां ताः गावः तासां पतिः । गौः नादित्ये बलीवर्दे क्रतुभेदर्षिभेदयोः । स्त्री तु स्यात् दिशि भारत्यां भूमौ तु सुरभावपि । पुंस्त्रियोस्तु दिक् —वज्रांशु —रश्मिदृक् बाणलोमसु इत्यभिधानात् ॥

कथं भूतः — उन्नतदृप्तवत् गच्छतीत्यसौ तथा । पुनः कथं भूतः — वाचां यत् नाम तन्नाम यासां ताः गावः ताभिः परिवृतो युक्तः । कथं भूताभिः ? विषं पानीयं तस्य यन्नाम यस्य तत् पयः दुग्धं तद्ददति इति ताः ताभिः । कथंभूतः प्रकर्षेण मुदितः हृष्टः ॥

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அந்த வாலிபன் மேலும் கூறுகிறான். இடி முழக்கம் செய்யும் கருத்த மேகங்களைப் பார்த்த காளை ஒன்று அந்த மேகத்திற்குப் போட்டியாகத் தானும் எக்காளமிடுகிறது. गो என்ற சொல் ஆண்பாலாகில் காளை சூரியன், ஒருவகை யாகம், முனிவர் என்ற பொருளைத் தரும். பெண்பாலாகில் கிழக்கு முதலான திசை, சொல், பூமி, காமதேனு என்ற பொருளைத் தரும். இரு பால் சொல்லாகக் கொண்டால் திசை, வஜ்ராயுதம், ஒளி, சூரியகிரணம் பாணம் Arrow உரோமம் என்ற பொருளைத் தரும். எனவே இந்த இடி முழக்கம் செய்யும் கருத்த மேகத்திற்குப் போட்டியாகக் காளை எதிர்முழக்கமிடுவதைக் காணில் சூரியன் நாற்றிசைகள் யாவும் அதற்குப் போட்டியாக எதிர் முழக்கம் செய்வதாகக் கூறவேண்டியிருக்கிறது.

சூரிய ஒளி எனும் சொல்லுக்குச் சமமான பெயர் கொண்டவை பசுக்கள். அவற்றின் தலைவன் காளை ஒன்று தலை நிமிர்ந்து கர்வத்துடன் செல்கிறதாம். அது वाक् என்னும் சொல்லுக்கு என்ன பொருளோ அதே பொருளைக் குறிப்பிடும் பாலைத் தருகிற பசுக்களிடையே மகிழ்ச்சியுடன் நடந்துகொண்டிருக்கிறது. மேகத்தின் இடி ஒலி கேட்டதும், அதனைப் பொறுக்க மாட்டாமல் தானும் எக்காளமிடுகிறது பார்.

सूर्यांशु वाक् என்ற சொற்கள் பசுக்களைக் குறிக்கும். उस्रा என்பதற்கும் பசு என்று பொருள். विष என்பதற்கு பால் என்பது பொருள் प्रतिनानदीति என்ற வினைச்சொல் மிக அரிய சொல்லாகும். "திரும்பத் திரும்ப எதிர்த்து ஒலி செய்கிறது" என்று அதன் பொருள். पुनः पुनः नदति — नानदीति ॥ இம் மாதிரி மிகவும் கடுஞ்சொற்களைக் கொண்ட இந்த ராக்ஷஸ காவியம் வியாக்யானம் இல்லாமல் படிப்பதும் பொருள் அறிவதும் மிக மிகக் கடினம் என்பதில் ஐயமில்லை. எனவேதான் இந்தச் சிறு காவியம் புழக்கத்தில் இல்லாமல் இருந்து வருகிறது.

एतं पयोदप्रतिरुन्नमितं पयोदं
खस्थं महीतलगतः प्रतिगर्जतीव ।
भित्वाऽवनिं वनरुहाक्षि शिरोरुहाभ्यां
सम्प्रस्थितोऽमृतधरैरभिषिच्यमानः ॥ ७

हे वनरुहाक्षि, पद्माक्षि, पयः क्षीरं ददति, ताः गावः तासां पतिः वृषः एतं प्रत्यक्षं पयोदं (पयः जलं ददाति इति पयोदः मेघः तं) मेघं प्रति गर्जति इव प्रतिशब्दं करोतीव । किं भूतः? शिरसि रोहतः शिरोरुहे ताभ्यां शृङ्गाभ्यां अवनिं पृथिवीं भित्वा विदार्य, संप्रस्थितः प्रकर्षेण स्थितः ।

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

कथं भूतः महीतले गतः वर्तमानः । पुनः कथं भूतः अमृतधरैः मेघैः अभितः सिच्यमानः कथंभूतं एतं उन्नमितं उच्चं । पुनः कथंभूतम् । खे आकाशे तिष्ठति इति खस्थम् ॥

தாமரை (இதழ் போன்ற) கண்களுடைய பெண்ணே! அந்தப் பசுக்களுக்கெல்லாம் தலைவனாகிய காளை வானில் பரந்துள்ள மேகத்தை நோக்கி மேகத்தின் இடிமுழக்கத்திற்கு எதிராக எக்காளமிட்டு முழக்கம் செய்கிறது. அக்காளை தன் இரு கொம்புகளாலும் பூமியைக் குத்திக் கிளறிவிட்டு ஏதோ பெரிய சாதனை செய்துவிட்டதுபோல் நின்றுகொண்டு, மேகத்தில் அமுதம் போன்ற நீரால் குளிப்பாட்டப்பட்டுள்ள நிலையில் வானில் பரந்துள்ள மேகத்தை நோக்கிக் கர்ஜனை புரிகிறது.

இந்த ச்லோகத்தில் पयोद என்ற சொல் பசு, மேகம் இரண்டையும் குறிப்பிடுகிறது. पयः என்பதற்குப் பால் என்றும், நீர் என்றும் பொருள். பாலைத் தருவது பசுக்கள், நீரைத் தருவது மேகம். शिरोरुह எனும் சொல்லுக்கு பொதுவாக பிரஸித்தமான பொருள் "தலைமயிர்" என்பதாகும். இவ்விடத்தில் காளைபற்றிக் குறிப்பிடப்படும் இடத்தில் காளையின் தலையில் காலப் போக்கில் முளைப்பதுதானே கொம்புகள். எனவே, शिरोरुह தலையில் முளைப்பது என்ற பொருளைத்தரும் அச்சொல்லால், "கொம்புகள்" என்ற பொருள் அச்சொல் மலப் படிக் நமாத்திரத்தில் விளங்குவதாக இல்லை.

स्रोतोजविक्षतजभूधरधातुरूपाः
खस्थाः पयोजदलदृक् शुचिशुक्रमासोः ।
मासोर्नभस्यनभसोरतिसम्पतन्तः
तीव्रं विषं विषधराः परिनिर्वपन्ति ॥ ८

पयोजं कमलं, तस्य दलं पत्रं तद्वत् दृशौ यस्याः सा । तस्याः सम्बुद्धिः [(हे) पयोजदलदृक्] विषं पानीयं धरन्तीति ते विषधराः मेघाः, तीव्रं दुःसहं विषं उदकं परितः निर्वपन्ति सर्वतः सिञ्चन्ति । किं भूताः स्रोतसि प्रवाहे जातं कमलं विशेषेण क्षतात् जातं रुधिरं भूधराः पर्वताः, तेषां धातवः गैरिकसुवर्णादयः तत्तुल्यं रूपं येषां ते । पुनः कथं भूताः खस्थाः गगनस्थाः । पुनः कथं भूताः—शुचि शुक्रमासोः ज्येष्ठाऽऽषाढयोः नभस्य नभसोः भाद्र-श्रावणयोः अति अत्यन्तं सम्यक् पतन्तः ॥

தாமரை இதழ்போன்ற கண்களையுடைய பெண்ணே! இந்த மேகங்கள் (கடுமையாக) நீரை எங்கும் பொழிகின்றன. மலைகளில் சிகப்பு நிறக்கற்கள்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மழை நீரில் கரைந்து செந்நீராக எங்கும் வழிந்தோடுகிறது. அன்றன்று நோக்கும்பொழுது வானில் உயர்ந்து நிற்கும் மலைகள் செந்தாமரை நிறத்தில் கடும் வெட்டுக்காயம் பட்டதால் அவற்றின் உடலெங்கும் வழிந்து பெருகும் இரத்தப்பெருக்கென்று எண்ணச்செய்து. ஆனி — ஆடி — ஆவணி — புரட்டாசி மாதங்களில் சிகப்புநிற நீரை எங்கிலும் வழிந்தோடச் செய்கின்றன.

இந்த ச்லோகத்தில் विषधराः विषं परिनिर्वपन्ति என்ற சொற்களைக் கேட்ட மாத்திரத்தில் கொடிய பாம்புகள் விஷத்தை எங்கிலும் வெளிப்படுத்துகின்றன. என்ற பொருள்தான் மனதில் தோன்றுகிறது. ஆனால் विष என்ற சொல்லுக்கு குடிநீர் என்ற பொருளும் உண்டு என்பதால் विषधराः जलधराः மேகங்கள் विषं-जलं நீரை என்று பொருள் கொள்ள வேண்டியிருப்பது கண்டு மனதில் ஆயாசம் ஏற்படச் செய்கிறது.

स्वयोनि[1]भक्षध्वजसम्भवानां
श्रुत्वा निनादं गिरिगह्वरस्थः ।
तमोऽरिबिम्बप्रतिबिम्बधारी
विरौति कान्ते पवनाशनाशः ॥ ௯

हे कान्ते, पवनं वायुं अश्नाति असौ पवनाशनः सर्पः तं अश्नाति इति सः तथा (पवनाशनाशः) मयूरः विरौति शब्दं करोति । किं कृत्वा - स्वस्ययोनिः उत्पत्तिस्थानं जलं । भक्षयति इति सः अग्निः तस्य ध्वजः धूमः तस्मात् सम्भवः उत्पत्तिः येषां ते मेघाः तेषां निनादं शब्दं श्रुत्वा गिरेः गह्वरं गुहा तत्र तिष्ठति इति । सः पुनः कथंभूतः तमसः अरिः चन्द्रः तस्य बिम्बं मण्डलं तत्प्रतिबिम्बानि चन्द्राः चन्द्राङ्कानि धरति इत्यपि पिञ्छचन्द्रकधारी । इत्यर्थः ॥

இந்த ச்லோகத்தில். ஹே (காந்தே) மனதிற்கினியவளே! மேகங்களின் இடிமுழக்க ஒலிகேட்டு மலைக்குகையில் இருக்கும் மயில் சத்தம் செய்கிறது.

இந்த ச்லோகத்தில் स्वयोनिभक्षध्वज என்ற சொல்லால் மேகம் குறிப்பிடப் படுகிறது. இவ்வாறு சொற்களைப் பிரயோகம் செய்வது காவ்யதோஷம் என்று சொல்லப்படும். இருகைகள் உள்ள மனிதர்களுக்கு என்பதனை अष्ट-अर्ध-अर्ध बाहूनां — अष्ट+अर्ध+अर्ध எட்டில் பாதி நான்கு அதில் பாதி இரண்டு, बाहु-கைகளையுடைய என்ற விதமாக பிரயோகம் செய்வது अर्थ தோஷமுள்ள

---

1. स्वयोनिः स्वयम्भूः கர்பவாஸத்தில் இருந்து தோன்றாதவற்றை स्वयोनि स्वयम्भू என்று சொல்வதுண்டு. அந்த முறையில் நீர் स्वयंयोनिः ॥

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இலக்கிய வகையாகும். எனவேதான், இம்மாதிரி சுற்றிவளைத்து பொருள் கூறும் விதத்தில் சொல் பிரயோகம் இலக்கியங்களில் தோஷங்கள் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இம்மாதிரி பதப்ரயோகங்கள்தான் இந்தச் சிறு காவியத்தை "ராக்ஷஸகாவிய"மாகச் செய்துவிட்டன.

गोष्ठश्च कुङ्कुमवपुः प्रतिराजतेऽसौ
सप्त्यद्रिदैत्यभुजगोत्तमशत्रुगोपः ।
उर्वीधराभमचिरोत्थितमम्बरं खे
दृष्ट्वाहिहा प्रमुदितो हिममहाह्वयानः (ह्वयोऽसौ) ॥ १०

अमी प्रत्यक्षः सप्त्यः अश्वाः "हयसैन्धवसप्तयः" इत्यमरः । अद्रयः पर्वताः दैत्याः असुराः भुजगोत्तमाः सर्पोत्तमाः वृत्रासुरः अपि) तेषां शत्रुः इन्द्रः तस्य गोपः इन्द्रगोपः इत्यर्थः । सः विराजते शोभते । कथम्भूतः, गवि भूमौ तिष्ठति । सः पुनः कथंभूतः, कुङ्कुमेन सदृशं वपुः यस्य सः । तथा अहिं सर्पं हन्ति इति सः मयूरः प्रमुदितः हर्षयुक्तः बभूवेत्यध्याहारः ॥ किं कृत्वा - अम्बरं खं आश्रयत्वेन यस्य सः मेघः, त खे आकाशे दृष्ट्वा कथम्भूतं–उर्वीधराऽऽभं उर्वीधरः पर्वतः तद्वत् आभा-शोभा यस्य सः तम् ॥ पुनः कथंभूतं अचिरोत्थितं नवोत्थित । किं भूतः । अहिहा सर्पहा – हिमं हन्ति सः वह्निः । अग्निर्हिमस्य भेषजं इति स्मृतिः ॥ तस्य आह्वयनं नाम यस्य सः मयूरः शिखीत्यर्थः ॥

அன்பிற்குரியவளே, பூமியில் இந்த்ரகோபம் என்ற (குங்குமச்சிவப்பு) சிவப்பு நிறமுள்ள பூச்சிகள் மழைக் காலத்தில் தரையில் ஊர்வன, அவை எங்கிலும் நிறைந்திருக்கின்றன. (மழைக் காலத்தில் சிகப்புநிறப் பூச்சிகள் தரையில் ஊர்வது இயல்பு) மயில்களும் வானில் புது மேகத்தைக்கண்டு மகிழ்ச்சியுற்றவைகளாக விளங்குகின்றன.

இங்கு இந்த்ர கோப என்ற பூச்சியைக் குறிப்பிடுவதற்கு **सप्ति – अद्रि – दैत्य भुजगोत्तमशत्रु - गोपः** என்று சொல்லப்படுகிறது. **अहिहा - हिममहाह्वय** என்ற சொற்கள் மயிலைக் குறிப்பிடுகின்றவை. இவை காவ்ய தோஷகரமான சொற்கள் ஆகும்.

कृष्णाम्बरः क्षरति तोयमसावजस्रं
अन्याविमौ रणगताविव वेभराजौ ।
अन्ये त्वमी द्विरदवृन्दनिभाः क्षरन्तः
प्रच्छादयन्त्यमरसिद्धविमानमार्गम् ॥ ११

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

असौ कृष्णं अम्बरं आश्रयत्वेन यस्य असौ कृष्ण + अम्बरः मेघः, नीलमेघ इत्यर्थः । अजस्रं निरन्तरं तोयं उदकं क्षरति स्रवति । अन्यौ इमौ प्रत्यक्षौ रणगतौ रणे वर्तमानौ इभराजौ इव गजश्रेष्ठाविव दृश्येते इति शेषः । अन्ये तु अमी प्रत्यक्षाः क्षरन्तः सन्तः अमराः देवाः सिद्धाश्च तेषां विमानमार्गं आच्छादयन्ति । कथम्भूताः द्विरदानां गजानां वृन्दं समूहः, तन्निभाः तत्सदृशाः ॥

எதிரே உள்ள இந்த கருத்த மேகம் இடைவிடாமல் நீரைப் பொழிகிறது. இந்த இரு மேகக்கூட்டங்கள் போர்க்களத்தில் நிற்கும் இரு யானைகள் போல் காணப்படுகின்றன. மற்ற மேகக் கூட்டங்கள் வானில் தம் விமானங்களில் செல்லும் தேவர்களின் சித்தர்களின் விமான மார்க்கத்தைத் தடை செய்கின்றன போல் காண்கின்றன.

वार्दाः खगाः क्षितिधरागमनप्रकाशा

नेमीभरासभतुरङ्गमतुल्यघोषाः ।

वाय्वीरिताः खमवतत्य वनं क्षरन्तो

वार्भिः क्षितिं घृतधराः परिनिर्वपन्ति ॥ १२

वाः उदकं ददति ते वार्दाः मेघाः वार्भिः जलैः क्षितिं परितः निर्वपन्ति सिञ्चन्ति । कथंभूताः खे आकाशे गच्छन्ति ते खगाः क्षितिधराः पर्वताः तेषां आसमन्तात् भावेन गमन तत्प्रकाशास्तत्तुल्याः । पुनः कथंभूताः, नेमिः रथस्य चक्रधारा, इभः गजः, रासभः खरः, तुरङ्गमोऽश्वः, तत्तुल्यः घोषः येषां ते । पुनः कथंभूताः वायुना ईरिताः प्रेरिताः पुनः कथंभूताः, खं अवतत्य व्याप्य जलं क्षरन्तः स्रवन्तः पुनः कथंभूताः, घृतं जलं धरन्तीति ते जलधराः इत्यर्थः ॥

மேகங்கள், வானில் செல்லும் மலைகள் போன்று தோற்றமளிக்கின்றவைகளாய் தேர்ச்சக்கரம், யானை, கழுதை, குதிரைகளின் ஒலிபோல் பல விதங்களில் முழக்கமிடுகின்றன. காற்றினால் தூண்டப்பட்ட நீருண்ட மேகங்கள் பூமி முழுவதும் நீரைச் சொரிகின்றன வार्दाः खगाः घृतधराः वनं ஆகிய சொற்கள் ச்லோகத்தின் பொருளை எளிதில் காண்பதற்கு உதவியாக இல்லை.

एषोऽङ्घ्रिपाशनरिपुप्रसुतारिसाह्व-

मारुह्य तिष्ठति सुगात्रि भुजङ्गमारिः ।

यस्य स्वनैः प्रमुदितस्य ममाद्य बाले(देहे)

तालध्वजाग्रजसूनुशराः पतन्ति ॥ १३

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

हे सुगात्रि, सुन्दराङ्गि, बाले, एषः भुजङ्गमारिः मयूरः, अङ्घ्रिभिः पिबन्ति ते वृक्षाः तान् अश्नाति अग्निः तस्य रिपुः उदकम् । तद् हन्ति असौ सूर्यः तस्य सूनुः कर्णः तस्य रिपुः अर्जुनः तस्य समा आह्वा यस्य सः अर्जुनवृक्षः तं आरुह्य तिष्ठति । एषः कः ? यस्य स्वनैः अद्य प्रमुदितस्य मम तालध्वजस्य अवरजः कृष्णः तत्सूनुः कन्दर्पः तस्य शराः मार्गणाः । पतन्ति शरीरे इति शेषः ॥

ஏ மென்மையான அழகிய உடலையுடைய இளம் பெண்ணே. இந்த மயில் "அர்ஜுன" மரத்தில் ஏறியமர்ந்துள்ளது. இதன் ஒலி கேட்கும் என் உடலில் மன்மதனுடைய கணைகள் பாய்ந்து துன்புறுத்துகின்றன. என்று கூறுகிறாள். (இங்கு அர்ஜுன மரம் என்று பொருள் காண்பதற்குள் தலை சுற்றல் வந்துவிடும் போல் இருக்கிறது. अङ्घ्रिप மரம் अशन அதனை அழிக்கும் தீ, अरि அதன் பகை நீர், ஈ அதனை அழிப்பது சூரியன். सुत அவனுடைய குமாரன் கர்ணன், अरि அவனுடைய பகைவன் அர்ஜுனன் साह्व அவனுக்கு சமானமான பெயர்கொண்ட மரம் அர்ஜுன மரம். இங்கு மன்மதன் என்ற பொருளைக் காண்பதிலும் கடினம். ताल பனைமரம் ध्वज கொடியில் உள்ளவன் பலராமன். அவனுடைய अवरज உடன் பிறந்த தம்பி கிருஷ்ணன் सुत குமாரன். மன்மதன் பகவானுடைய குமாரன் என்று சொல்லப்படுகிறது.

उस्राविषं स्थलगतोऽत्ति तथैव वाभ्यो
वार्जो द्विजः स्वपितृभीरुविषप्रहीणः ।
वाताशनः खशयनः स्मरति स्थलस्य
चक्षुःश्रवा वनभयात्सुरशत्रुनामा ॥ १४

हे सखि, वारि जातः वार्जः द्विजः कच्छपः, वाभ्यः उदकेभ्यः स्थलगतः स्थलं उत्तीर्णः, सन्, उस्राः गावः, तासां विषं गोमयं अत्ति । अद भक्षणे । स्वपिता तस्य भीरुः स्त्री,—माता तस्याः विषः दुग्धं तेन प्रहीणः रहितः । तेषां उत्पत्त्यनन्तरं मातृदर्शनेनैव जीवनात् ॥ न दुग्धेन ॥ तथा वाताशनः सर्पः, स्थलस्य स्मरति कर्मणि षष्ठी, स्थलं ध्यायतीत्यर्थः । किम्भूतः ! खे शयनः खे बिले शेतेऽसौ । तथा कस्मात् ध्यायति — वनं उदकं तस्य भयं तस्मात् । पुनः चक्षुःश्रवाः चक्षुरेव श्रोत्रं यस्य सः, पुनः सुरशत्रुनामा सुराणां शत्रुः वृत्रासुरः तस्य यत् नाम तत् यस्य सः अहिः इत्यर्थः ॥

ஏ தோழியே! அதோ ஒரு ஆமை நீரினின்றும் வெளியேறி தரைக்கு வந்து பசுவின் சாணத்தைத் தின்கிறது. ஏன் தெரியுமா! அது தன் தாயின்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பாலை அருந்த இயலாது. (ஆமைகள் பிறந்த பிறகு தாயின் அன்பு கலந்த பார்வையாலேயே வளருகின்றன. தாயின் பாலை அருந்தி வளர்வதில்லை) மேலும். அதோ ஒரு வளையில் (பொந்தில்) உள்ள பாம்பு தரையில் இறங்கி வருவதற்கு விரும்புகிறது. ஆனால் எங்கிலும் தண்ணீர் இருப்பதால் தரையில் இறங்கிவர பயப்படுகிறது. இங்கு தாய் என்ற பொருளைக் கூறும் சொல் स्वपितृभीरु தன் தந்தையிடம் பயப்படக்கூடிய பெண் தாயாகத்தானே இருக்க முடியும் என்பதால் அச்சொல்லிற்குத் தாய் என்று பொருள் கூறவேண்டும். ख என்ற சொல்லிற்கு 'வானம்' என்பதே பிரசித்தமான பொருள். ஆனால் இங்கு ख என்பதற்கு (மரம்) 'பொந்து' என்று பொருள். மேலும் वन भयात् நீரில் உள்ள பயத்தால். பாம்புக்கு இன்றும் ஒரு விசேஷணம் (Adjective) सुर शत्रु தேவர்களின் பகைவன் விருத்திராசுரன். அவனைக் குறிப்பிடும் சொல் अहि என்பதாகும். अहि என்றால் பாம்பு என்று பொருள்.

पश्यश्वमेधतुरगप्रतिमोऽष्टवर्णो
वार्दं नवं त्विति समाह्वयति ह्यहिघ्नः ।
भेकस्तथैव खशयाशयवेद्यवाणिः
शब्दं करोत्यतिभृशं विषराशिमग्नः ॥ १५

पक्षी अहिघ्नः मयूरः, इति कारणात् वार्दं मेघं वनं समाह्वयते । किम्भूतः अश्वमेधसम्बन्धी तुरगः तेन प्रति(मा) समा आभा आकृतिः यस्य सः, अष्टौवर्णाः यस्य सः. इति । किं हि बहुवर्षतीत्यर्थः । हि.पूरणे । तथा भेकः मण्डूकः विषराशिः उदकराशिः तस्मिन् मग्नः वसन् सन् अतिभृशं अत्यन्तं शब्दं करोति । किम्भूतः खे बिले शेतेऽसौ सर्पः, तस्य आशयः-स्थानं बिलं, तस्मिन् वेद्या । वाणी यस्य सः ॥

பெண்ணே! அதோ அந்த மயில் அச்வமேதக் குதிரைக்கு உரிய எட்டு அங்கங்களுடன் நிறங்களுடன் கூடிய மயில், மேகத்தை நோக்கி ஏன் இவ்வளவு கடுமையாக மழை நீரைப் பொழிகிறாய் என்று கேட்பது போல் அகவுகிறது. அதோ நீரில் மூழ்கி நிற்கும் தவளை மரப் பொந்தில் உள்ள பாம்பின் காதுகளுக்குக் கேட்பது போல உறக்க சப்தமிடுகிறது.

ना विष्टिरा वनमुपेत्य कुमातृसाह्व-
माक्रीडने मधुकलो तनयासमेतः ।
अन्यः स्वयं मणिवराभमुपेत्य गोजं
ना रामया सह पयःपलिजां वृणीते ॥ १६

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

हे सखि, पश्य, मधुना मद्येन कलः सुन्दरः, ना पुरुषः विष्टिराः पक्षिणः तेषां आवनं समूहः स विद्यते यस्मिन् सः । तं कुत्सिता माता अम्बा — यस्य तत्समा आह्वा यस्य सः, तं कदम्बं उपेत्य आगत्य—अतनयासमेतः न जातः तनयः तनया वा यस्याः । अतिमदनयुक्तेत्यर्थः । तया सहितः सन् आक्रीडते । अन्यः स्वयं मणिषु वराः श्रेष्ठाः इन्द्रनीलाः तद्वत् आभा यस्य तत् गोजं गवि भूमौ जातं तृणादिकं उपेत्य आगत्य ना पुरुषः रामया श्रिया सह पयसां पतिः समुद्रः, तस्मात् जाता तां लक्ष्मीं वृणीते अङ्गीकरोति ॥

தோழியே! (தற்காலத்தில் girl friend என்று வழங்கப்படும் முறை பண்டைக்காலத்திலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டதுதான்) அதோ பார். ஒரு ஆண் (பறவை) பல பறவைகள் அமர்ந்துள்ள கதம்ப மரத்தை அடைந்து ஒரு பெண் (பறவையுடன்)னுடன் விளையாடுகி(றான்)றது அந்த ஆண் பறவை தேனை அருந்திவிட்டு (மது என்னும் சொல்லுக்கு தேன் என்றும் மயக்கம் தரும் திரவப் பொருள் என்றும் பொருள் உண்டு) அதன் காரணமாக சொல்லால் விளக்குவதற்கு முடியாத விதத்தில் அழகுறச் சப்தமிடுகிறது. அப் பெண் பறவை இதுவரை முட்டையிடாத பருவத்தில் உள்ளதாம். இன்னொரு ஆண் பறவை தன் இணைப்பறவையுடன் பச்சைப்பசேல் என்று ஜாதி நீலக்கல் போல் ஒளிபெற்று விளங்கும் புல் தரையில் அமர்ந்துள்ளது எத்தனை அழகாக இருக்கிறது பார். இங்கு ना विष्टिर आवनं कुमातृसाह्व अतनयासमेत गोज என்ற சொற்கள் எளிதில் பொருள் கொள்ள இயலாதவை.

स्यूतं महत् क्षतजवर्णनिभं वरोऽसौ
वर्भर्ति(र्त्य)अमूनि च भिनत्ति सरोरुहाणि ।
तज्जेन वापि रजसा वनितां वयस्थो-
ऽप्यभ्युद्धरत्यवकिरत्यभिषिच्यमानः ॥ १७

असौ वरः पुमान् महत्, क्षतजवर्णनिभं महाक्षतात् जातं रक्तं तस्य यो वर्णः तत्सदृशं आरक्तं वस्त्रं वर्भर्ति च बिभर्ति । पुनः अमूनि सरोरुहाणि कमलानि, भिनत्ति लुनाति । पुनः वयस्थः युवा वनितां स्त्रीं तज्जेन कमलजेन रजसा अभि समन्तात् उद्धरति अवकिरति च क्षिपति च ॥ कथं भूतः, अभिषिच्यमानः वनितया क्रीडारसेनेति शेषः ॥

ஏ பெண்ணே! அதோ பார், ஒரு ஆண் (பறவை) வெட்டுக்காயத்திலிருந்து பெருகும் இரத்தம் போன்ற ஆடையை அணிந்திருக்கிறான்(றது). அவன் (அது)

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

அத்துடன் இருந்துவிடவில்லை. அதோ அந்தச் செந்தாமரைகள் மலருந் தறுவாயில் உள்ளவ அல்லவா ! அவற்றின் மேல் புறமுள்ள இதழ்களை விலக்குகிறான்.(றது) விலக்கிவிட்டு அத் தாமரை மலரின் உட்புறத்தில் இருக்கும் மகரந்தப் பொடிகளை அப்பெண் (பறவை) மீது தூவுகிறான்.(கிறது) தாமும் அந்த முயற்சியில் மகரந்தப் பொடியால் நனைந்து விடுகிறான்(றது). ஆண் பெண் (பறவை)கள் கலந்து உறவாடி விளையாடும் இந்தக் காட்சி எத்தனை அழகாக இருக்கிறது பார் ! இதில் स्यूत वर्मित என்ற சொற்களின் பொருள்கள் எளிதில் விளங்குவன அல்ல.

पङ्के निमग्नमिभवृन्दमदः सवारि
गर्जत्तिमी(मि)क्षयदवृन्दमिवावभाति ।
वार्यात्मनः शतविचित्रतनुः सुपर्णो
योषिद्वृतः समदनः प्रतिरोरवीति ॥ १८

हे वनिते, अदः इभवृन्दं गजसमूहः पङ्के निमग्नं सत् तिमीनां मीनानां क्षयं नाशं ददति मेघाः, तेषां वृन्दमिव अवभाति । किम्भूतं गजवृन्दं मेघवृन्दं च सवारि समदं सोदकं चेत्यर्थः । गर्जत् सशब्दं अथवा अदः मेघवृन्दं पङ्के निमग्नं इभवृन्दं इव, अवभातीत्यर्थः ।

अयं मदनेन सहितः, समदनः, योषिद्भिः, मयूरीभिः, वृतः युक्तः सुष्ठु पर्णानि पक्षा यस्य सः मयूरः तिमिक्षयदवृन्दं मेघसमूहं प्रति रोरवीति प्रतिशब्दं करोति कथं भूतः वार्यात्मनः चन्द्रस्य शतकं तेन विचित्रतनुः चित्रशरीरः ॥

ஏ தோழியே ! (பெண்ணே) அதோ பார். கர்ஜனை செய்யும் सवारि — மதம் பிடித்த யானைக்கூட்டம். அவை இயல்பாகவே கருநிறம் கொண்டவை. அவைகள் சேற்றிலும் புரண்டு மூழ்கி எழுந்தமையால் தமின் மேலும் கருநிறம் பெற்று மேகக்குவியல் போல் காட்சியளிக்கிறது. அல்லது அந்த மேகக் குவியல், सवारि நீருடன் விளங்குவது. இடி முழக்கம் செய்கிறது. அது சேற்றில் புரண்டு கர்ஜனை புரியும் மதஜலத்துடன் விளங்கும் அதோ அந்த யானைக் கூட்டம்போல் விளங்குகிறது. மேலும் அதோ பார்! அந்த ஆண் மயில், பெண் மயில்களுடன் கூடியிருந்து, இடிமுழக்கமிடும் மேகத்தைக் கண்டுவிட்டுத்தாமும் எதிர்முழக்கம் செய்கிறது. அந்த ஆண்மயில் காதல் உணர்வுடன் பெண் மயில்களுடன் கலந்து விளையாடுகிறதே. அது பிறைச்சந்திரன் போன்ற பல வடிவங்களைத் தன்னுடைய தோகையில் கொண்டு மிக அழகாக விளங்குகிறது. இதில் सवारि நீருடன் கூடிய—மதஜலத்துடன் கூடிய तिमिक्षयदवृन्द वार्यात्मन्

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

समदन என்ற சொற்கள் எளிதில் பொருள் விளங்காதவை. **सुपर्ण** என்ற சொல் பலம் மிகுந்த இறக்கைகளைக் கொண்ட கருடனைக் குறிக்கும். இச்சொல் இவ்விடத்தில் அழகான தோகையிறகுகளைக் கொண்ட மயில் என்ற பொருளில் வந்துள்ளது.

विस्फोटिताम्बररवेण रिरंसुरेव
सन्त्रासितो हरिरनोकहनिष्कुटीषु ।
संलीयते ह्यभिमुखीं तडितं च दृष्ट्वा
खात् खं महत्तरमसौ समनुप्रविष्टः ॥ १९

हे वनिते, असौ हरिः सिंहः विस्फोटिताम्बररवेण अम्बरसम्बन्धी अम्बरः मेघः तस्य रवः शब्दः विस्फोटितश्चासौ अम्बररवश्चेति समासः । विस्फोटितः अत्युच्चतया इत्यर्थः । तेन सन्त्रासितः सन् अनोकहाः वृक्षाः तेषां निष्कुटीषु निकुञ्जेषु संलीयते । पुनः रिरंसुः रन्तुमिच्छुः भयभीत एव अभिमुखीं तडितं विद्युतं दृष्ट्वा खात् बिलात् महत्तरं खं महागुहां सम्यक् अनुप्रविष्टः त्वं पश्येति समुदायार्थः ।

இந்த ச்லோகத்தில் பொருள் காண்பதில் அதிகம் சிரமம் ஏற்படவில்லை ஏ பெண்ணே! அதோ அந்த ஆண் சிங்கம் பெண் சிங்கத்துடன் இன்பம் துய்க்க விரும்பிய நிலையில் கடுமையான இடி முழக்கம் காரணமாக பயந்து போய் பெரியதாக வளர்ந்துள்ள செடிகளிடையே (புதர்களிடையே) ஒளிந்து கொண்டது. ஆனால் எதிர்புறத்தில் வீசும் மின்னலைக் கண்டு மேலும் கருமையான இடி முழக்கம் ஏற்பட இருப்பதை எண்ணி மேலும் பயந்து ஒரு குகையில் நுழைந்து. பிறகு அதையும் தவிர்த்துவிட்டு பெரிய குகையினுள் நுழைந்தது(கிறது) பார் என்று அந்த ஆண்மகன் கூறினான்.

இந்த ச்லோகத்தில் **अम्बर खात् खं महत्तरं** என்பதில்தான் பொருள்கொள்ள சிரமம் ஏற்படுகிறது. **अम्बर** என்பதற்கு வானம் என்பதுதான் நேர்ப்பொருள் இங்கு வானில் உள்ள மேகம் எனப் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. "ஊர் சிரிக்கிறது" என்ற சொற்றொடரில் ஊர் எனும் சொல் ஊரில் உள்ள மக்களைக் குறிப்பது போல் இங்கு **अम्बर** வானம் எனும் சொல் வானில் உள்ள மேகத்தைக் குறிப்பிடுகிறது. சிரிக்கும் இயல்பு மக்களுக்குத் தான் உண்டு. அசேதனமான வீடுகளுக்கு அல்ல. அதுபோல் முழங்கும் இயல்பு, மேகத்திற்கேயன்றி வானத்திற்கல்ல. லக்ஷணா விருத்தியால் இங்கு வானம் எனும் சொல் வானத்தில் உள்ள மேகத்தைக் குறிப்பிடுவதாகிறது. **खात् खं ख** என்னும் சொல் வானத்தைக் குறிப்பிடுவதாகும். **खायते खन्यते इति खं** தோண்டப்படுவதால் குகை எனும் பொருளும் உண்டு.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

एतावदुत्तमवचः सुमनाः स उक्त्वा
रन्त्वा दिनं सह तया प्रियया ह्यदीनः ।
युक्तं चतुर्भिरनडुद्भिरदीनवद्भि-
रारुह्य यानमथ स प्रययौ स्वगेहम् ॥ २०

अथ अनन्तरं स पुरुषः अदीनवद्भिः सन्तुष्टैः अनडुद्भिः वृषभैः चतुर्भिःयुक्तं यानं आरुह्य स्वगेहं प्रययौ ॥ कथंभूतः अदीनः अतिसन्तुष्टः । किं कृत्वा एतावत् उत्तमं वचः उक्त्वा ॥ पुनः किं कृत्वा तथा सह दिनं रन्त्वा क्रीडयित्वा (क्रीडित्वा) । कथंभूतः सुमनाः सुष्ठु मनः यस्य असौ ॥

॥ इति श्रीकालिदासकृतौ राक्षसकाव्यं संव्याख्यान सम्पूर्णम् ॥

அந்த இளைஞன் தன் அன்பிற்குரிய பெண்ணிடம் இவ்வாறெல்லாம் கூறி அன்றையப்பொழுதை அப்பெண்ணுடன் இன்பமுடன் செலவிட்டுவிட்டு நான்கு காளை மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில் அமர்ந்து தன் வீடு சென்றான். என்பதுடன் இந்த ராக்ஷஸ காவியம் நிறைவு பெறுகிறது.

காவியங்கள் இம்மாதிரி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணங்கள் உண்டு. சொல்லழகு, பொருளலங்காரம், சொல்-பொருள் குற்றமில்லாத உரைநடை வடிவான அல்லது செய்யுள்நடை வடிவான கவிஞனின் படைப்பு காவியம் எனப்படும்.

இலக்கியத்தின் தரத்தைக் குறைக்கக் கூடியவையாய் சில தோஷங்களும் கூறப்பட்டுள்ளன. பெரும்பாலும் கவிஞர்கள் உபயோகிக்காத சொற்கள், நிறைந்த நேர்ப் பொருளைத் தராத வீணான கடின முயற்சியின் பேரில் பொருள் காணும் விதத்தில் உள்ள சொற்களை அமைத்தல், சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக இல்லாத கடினமான சொற்களைப் பயன்படுத்துதல், ஒரு சொல்லின் தொடர்பை இன்னொரு சொல்லுடன் கஷ்டப்பட்டு காண வேண்டிய நிலையில் சொற்களை அமைத்தல் போன்றவை காவிய தோஷங்களாகக் கூறப்படுகின்றன.

ராக்ஷஸ காவியத்தில் இந்த தோஷங்கள் அதிகம் உண்டு. எனவே ராக்ஷஸ காவியம் குற்றமற்ற காவியத்திற்கு ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

உயர்வான காவியத்திற்குச் சில "குணங்கள்" இருக்கவேண்டியதாக வலியுறுத்தப்படுகின்றன. ஒரு சொல் இன்னொரு சொல்லுடன் அழகுற இயல்பாக இணைந்துவருவது "ச்லேஷ" என்ற சப்த குணமாகும். பிரசித்தமான பொருளைத் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் 'ப்ரஸாதம்' என்ற

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

குணமாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு 24 குணங்கள் சிறப்பான காவியத்திற்கு உயர்வையளிக்கும் என்று இலக்கியம் பற்றிய இலக்கணங்கள் வகுத்துள்ள காவியாதர்சம், பிரதாபருத்ரீயம் முதலான ஸம்ஸ்க்ருத நூல்கள் பலவுண்டு.

காளிதாஸனின் காவியங்கள் ரகுவம்சம் தொடங்கி, சாகுந்தலம் ஈறாக உள்ள நூல்கள் யாவும் மஹாகாவ்யமெனக் கூறப்பட அக்கவி, சொற்களைக் கையாண்டமுறை. எண்ணி எண்ணிப்பார்த்துச் சுவைக்கும் பொருளை உணர்த்தும்முறை — காவியச் சுவைகளில் சிருங்காரச் சுவையை — ஆபாஸ உணர்வு ஏற்படாத விதத்தில் எக்காலத்திற்கும் பொருத்தமாகும் விதத்தில் பொருந்தம் மிகுந்த உவமைகளைக் கூறி உணர்த்தும்முறை ஆகியவையே ஆகும்.

காளிதாஸன் பற்றிய ஒரு பழமையான கருத்து உண்டு.

காவ்யேஷு நாடகம் ரம்யம்
 தத்ராபி ச சகுந்தலா ।
தத்ராபி சதுர்த்தோऽங்கஸ்ச்ச
 தத்ர ச்லோக சதுஷ்டயம் ।
தத்ராபி யாஸ்யத்யத்யேதி
 ச்லோகஸ்ஸர்வமனோஹர: ॥

என்று. காளிதாஸனின் काव्य — கேட்டு இன்புறும் "இலக்கியங்களைவிட" நாடகங்கள் உயர்ந்தவை. அவற்றுள் சாகுந்தலம் (அபிக்ஞான சாகுந்தலம்) சிறப்புடையது. அதிலும் 4வது அங்கம் (Chapter) மிகவும் உயர்வானது. அதிலும் "यास्यत्यद्य शकुन्तलेति" என்ற ச்லோகம் எல்லாவற்றிலும் உயர்வானது என்பது இதன் பொருள்.

மேகஸந்தேசத்தில் யக்ஷன் தன் காதலிக்கு மேகத்தின் வழியாக என்ன செய்தி அனுப்பினான் என்று நூலில் புதுந்து பார்ப்போமாகில், மூன்றே மூன்று ச்லோகங்களில் உள்ள கருத்துக்களைத்தான் செய்தியாக அனுப்புகிறதாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளை ரஸிக மனம் படைத்தவர் — கேட்க ஆர்வமுள்ள வரிடையில் அமைதியான சூழலில் ஒரு நல்ல ரசிகர் கூறக்கேட்க வேண்டும்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

त्वां आलिख्य प्रणयकुपितां धातुरागैः शिलायां
आत्मानं ते चरणपतितं यावदिच्छामि कर्तुम् ।
अस्रैस्तावन्मुहुरुपचितैः दृष्टिरालि(लु)प्यते मे
क्रूरस्तस्मिन्नपि न सहते सङ्गमं नौ कृतान्तः ॥

சுருக்கவுரை — யக்ஷன் கூறுகிறான்: அன்பே! விதிவசத்தால் நாம் பிரிந்திருக்கலாயிற்றே. உனது உருவத்தை வரைந்து; [அதாவது காதல் தொடர்பாக, பொய் கோபத்துடன் நீ இருப்பதாகவும், நான் உன்னைச் சமாதானப்படுத்துவதாகவும்—] நான் உன் உருவத்தை மலையில் உள்ள செங்கல்லால் வரைந்து, உன் பாதங்களில் நான், என் தலையை வைத்து உன்னை சமாதானம் செய்வதாகவும் பாவனையாக ஒரு சித்திரம் எழுத முற்படுகிறேன். இந்த வகையிலாவது உன்னை நான் நெருங்க, உன் சம்பந்தம் பெறவிரும்பி சித்திரம் எழுத ஆரம்பித்தால் என் கண்கள் உணர்ச்சி மிகுதியால் குளமாகிவிடுகின்றன. கண் பார்வை தெரிந்தாலல்லவா மேலும் சித்திரம் எழுதி நிறைவு செய்யமுடியும். எனவே இம்மாதிரியான முறையிலும்கூட உன்னுடைய சம்பந்தத்தை நான் பெற பாழும் தெய்வத்திற்குப் பொறுக்கவில்லை.

मां आकाशप्रणिहितभुजं निर्दयाश्लेषहेतोः
लब्धायास्ते कथमपि मया स्वप्नसन्दर्शनेषु ।
पश्यन्तीनां न खलु बहुशो न स्थलीदेवतानां
मुक्तास्थूलास्तरुकिसलयेष्वश्रुलेशाः पतन्ति ॥

ஹே மேகமே! நீ அலகாபுரி சென்று என் காதலியிடம் இதனைக் கூறுவாயாக. அன்பிற்குரியவளே! உன்னைப் பிரிய நேரிட்ட நாள் முதலாகத் தூக்கம் என்னை விட்டுச் சென்றுவிட்டது. ஆனால் எப்பொழுதாவது, என்றைக்காவது ஓய்ச்சல் ஏற்பட்டு கண்களை மூடினால் கனவில் நீ வந்து விடுகிறாய். வெகுநாள் கழித்து சந்தித்த உன்னை இறுக்கமாக — துளியும் இரக்கமில்லாமல் — இறுக்கி அணைத்துக்கொள்வது உனக்குத் துயரத்தைத் தருமே என்று கூட சிந்திக்காமல் — என் மனம் நிறைந்த பிரிவாற்றாமையை வெளிப்படுத்தும் முகமாக — உன்னை இறுக்கமாக அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேகத்தில் கனவில் வந்த — உன்னை நேரிலேயே வந்தவிட்டதாக எண்ணி அணைப்பதற்காக என் இரு கைகளையும் நீட்டுவதுண்டு. உண்மையில் நீ எங்கோ இருப்பதால் நீட்டப்பட்ட என் கைகளிடையே ஏதும் இருக்காது. இந்த என் நிலையை உணர்ந்த வனதேவதைகள் அந்தோ!

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பரிதாபம். காதல் வயப்பட்ட இந்த யக்ஷன், தன் காதலிதான் உண்மையில் எதிரில் வந்துவிட்டாளோ என்ற எண்ணத்தில், காதல் வேட்கை மிகுதியால் கைகளை வெற்றிடத்தில் வானில் நீட்டுகிறானே! என்று எனது நிலையை நினைத்துக் கண்ணீர் வடிக்கின்றன. இது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சி என்று சொல்வாயாக. (மலைச்சாரலில் மழை நீர்த்துளிகள் முத்துக்கள் போல் இலைகள் மீது விழுந்து, அதிலிருந்து சொட்டு சொட்டாகத் தரையில் விழுமல்லவா. அவ்வாறு இலைகள் மீது விழும் நீர்த்துளிகளை வனதேவதைகள்தான் யக்ஷனின் நிலைகண்டு பரிதாபத்தால் கண்ணீர் விடுவதாக உத்ப்ரேக்ஷையாக கூறுகிறான்.

भित्त्वा सद्यः किसलयपुटान् देवदारुद्रुमाणां
ये तत्क्षीरस्रुतिसुरभयो दक्षिणेन प्रवृत्ताः ।
आलिङ्ग्यन्ते गुणवति मया ते तुषाराद्रिवाताः
पूर्वं स्पृष्टं यदि किल भवेत् अङ्गमेभिस्तवेति ॥

ஹே மேகமே, நீ அலகாபுரி செல்லும்பொழுது இடிமுழக்கம் ஏதும் செய்துவிடாதே. ஏனெனில், என் மனதிற்கு இனியவள், என்போலவே தூக்கமில்லாமல் அவதிப்பட்டு, அசதி மிகுதியால் கண்ணை மூடிக்கொண்டு சற்றே தூங்க முயற்சித்திருப்பாள். அச்சமயம் அவளுடைய கனவில் நான் அவளுடன் இணைந்திருப்பேன். கனவிலாவது இணையும்நிலை ஏற்பட்டு இருக்கும் நிலையில் நீ இடிமுழக்கம் செய்தால் அவளுடைய தூக்கம் கலைந்துவிடும். அந்தப் பாபத்திற்கு நீ ஆளாகாதே. அவள் விழித்திருக்கும்பொழுது உனது சகோதரனாகிய எனது காதலியிடம் (இங்கும் ஒரு நுணுக்கமான செய்தியைக் கவி புகுத்தியிருக்கிறான். அதாவது, நீ சந்திக்கப்போவது காதலனைப் பிரிந்து வாழும் ஒரு இளம்பெண்ணையல்லவா? காதலன்தான் அருகில் இல்லையே என்ற எண்ணத்தில் அவளிடம் அதிகம் நெருங்கிவிடாதே தவறான எண்ணத்தில் நெருங்கும எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே நீ பார்க்கப்போவது உன் சகோதரனுடைய மனைவி. சகோதரனுடைய மனைவியாளை வயதில் மூத்தவளை தாய்போல் எண்ணவேண்டும் என்பது நமது மரபு என்பதை நேரிடையாகக் கூறாமல் மறைமுகமாக, நீ அங்கு உன் சகோதரனின் மனைவியைப் பார்ப்பாய். பார்த்து) இதனைச் சொல்.

இமயமலைச்சாரலிலிருந்து கிளம்பும் காற்று தெற்கு நோக்கி வரும்பொழுது அதன் சிறு அசைவையும் தாங்கமாட்டாத தேவதாரு மரங்களின் இளம் துளிர்கள் ஒடிந்து விழுந்துவிடும். அச்சமயம் அக்கிளைகளிலிருந்து

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

பெருகும் தேவதாரு மரத்தின் நறுமணம் மிகுந்த பாலின் நறுமணத்துடன் தென்திசை நோக்கி காற்று வீசும் பொழுதெல்லாம் நான் இமயத்தின் அக்காற்றினை என் இரு கைகளாலும் அணைத்துக் கொள்கிறேன் ஏன் தெரியுமா? அங்கிருந்து கிளம்பும் காற்று அருகில் அலகாபுரியில் உள்ள உன்மீதும் படர்ந்திருக்கலாமே என்ற ஆசையில் உன்மீது படர்ந்த காற்றை அணைத்துக் கொள்வதால் உன்னை அணைத்துக்கொண்ட சிறு மகிழ்ச்சி ஏற்படும். இந்த நிலையில் நான் இருப்பதாக அவளிடம் கூறுவாயாக என்று காளிதாஸனின் மேகஸந்தேசத்தில் உள்ள சில ச்லோகங்களையும் அதில் கூறப்பட்ட சில கருத்துக்களையும் இங்கு கூறியிருப்பது அவ்விரு காவியங்களின் தரம் எப்படிப் பட்டது என்பதனை இலக்கியப்பற்றுடையோர் அறிவதற்கே. ராமாயணத்தில் ராமன் **वाहि वात यत: कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश** என்ற கருத்தே இதில் கூறப்படுகிறது.

ஒரு காவியம் எவ்வாறு இருக்கலாகாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்ததுதான் ராக்ஷஸ காவியம் எனவும், ஒரு காவியம் எப்படியெல்லாம்— தேன்ஆடை போல் உள்ளும் புறமும் சுவை மிகுந்ததாகவும் அருவருப்பான கருத்தை ஏற்படுத்திவிடாதவாறும், எண்ணி எண்ணிச் சுவைக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளதே மேகஸந்தேசம் முதலான காவியங்கள் எனவும் கூறலாம்.

CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இந்நூலின் அடியொற்றி :—

B. 4781 / D. 3836 எண்ணுள்ள "ராக்ஷஸ காவியம்" என்னும் பெயருடன் உள்ள சுவடியின் கடைசியில் ஒரு ச்லோகம் பின்வருமாறு காணப்படுகிறது. ஆனால் அதன் பொருள் இந்த "ராக்ஷஸ காவிய"த்தில் கூறப்பட்ட பொருளை அனுசரித்ததாகவுள்ளதாகச் சுற்றி வளைத்துக்கூறி சமரஸப்படுத்தலாமேயன்றி அக்காவியத்திற்குத் தொடர்புடையதாகக் கூறமுடியவில்லை "ராக்ஷஸ காவியம்" முடிவுற்றது என்று எழுதப்பட்டு, அதற்குமேல் இந்த ச்லோகம் எழுதப்பட்டுள்ளது. சுவைப்பதற்கு உரியதாகவும் உள்ளது.

இந்த ராக்ஷஸ காவியம் போன்றே முற்காலத்திய ஸம்ஸ்க்ருத கவிகள் தமது அறிவாற்றலை வெளிப்படுத்தும் முகமாகக் கடினமான சொற்களைக் கொண்டு உரையின் துணையின்றிப் பொருள் காணமுடியாதவாறு சிறுசிறு காவியங்களை இயற்றியிருக்கிறார்கள். இக்காவியத்தின் அடிபொற்றியதாக "ராதாவினோத காவியம்" எனும் சிறு நூல் (20 ச்லோகங்களை மட்டும் கொண்டது). இந்த ராக்ஷஸ காவியத்தைவிடவும் கடினமான சொற்களை—பல பொருள் உள்ள சொற்களைக் கொண்டதாக இருப்பதால் இந்தச் சிறு நூலில் அக்காவியத்திலிருந்தும் எடுத்துக்காட்டாக ஒரு செய்யுளை இங்கு கூற விழைகிறேன்.

ராக்ஷஸ காவியத்தின் B. 4781 / D. 3836 எண்ணுள்ள சுவடியில் கடைசியில் உள்ள ச்லோகம் :

विरमति कथनं विना न खेदः
सति कथने समुपैति का च लज्जा
इति कलहमधीरमुखी सखीभ्यो
लपितुमनालपितुं समाचकाङ्क्ष ॥

ஒரு நாயகி, இளம்பெண், முன் இரவில் தன் நாயகனுடன் இருந்த பொழுது அவர்கள் இருவருக்குமிடையில் தனிமையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி இதில் ஏதும் கூறப்படவில்லையானாலும் "ஏதோ" அவ்விருவருக்கிடையில் நடந்திருக்கிறது—அது இன்பமளிப்பதாகவும் துயரம் அளிப்பதாகவும் இருந்திருக்கிறது – அது பற்றிய இனிய உணர்வு அந்த இளம் பெண்ணின் மனதில் இரவில் துய்க்கப்பெற்ற இன்ப நினைவுடனும் பொங்கும் காதலுணர்வுடன் இருப்பினும், கூச்சம் மாறாத இயல்புள்ளவளாக—காதலுணர்வை மீறிய வெட்கம் (கூச்சம்) உள்ள நிலையில் இருந்ததால் முதல் இரவில் தனிமையில் 'அவர் (நாயகன்) நடந்துகொண்டமுறை பற்றி மறுநாள் தம் தோழிகள் அவளிடம் வற்புறுத்திக் கேட்கும்பொழுது அவ்விளம்பெண் (मुग्धा नायिका) சங்கோசம் (வெட்கம்) காரணமாகச் சொல்லத் தயங்குகிறாள். நேற்று இரவு "அவர்" என்னிடம் நடந்துகொண்ட விதம் இன்பமானதாகவும், துயரமளிப்ப

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தாகவும் இருந்ததே. அந்த ''இன்பத்தொல்லை'' பற்றி வெளியில் யாரிடமாவது சொல்லாவிட்டால் மனம் ஆறாது போல தோன்றுகிறது. அவர் என்னிடம் நடந்து கொண்டது போல்தான் எல்லோரும் நடந்துகொள்வார்களா! அல்லது அது நான் மட்டும் பெற்ற அனுபவமா? அதுபற்றி யாரிடமாவது சொல்லத்தான் மனம் துடிக்கிறது. அப்படியானால் தோழிகள் தான் கேட்கத் தயாராக. நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அறிய ஆவலுடன் துருவித் துருவிக் கேட்கிறார்களே, சொல்ல வேண்டியதுதானே! என்றால் என்னிடம் அவர் நடந்துகொண்டது பற்றி வெளியில் சொல்வது எப்படி? வெட்கம் பிடுங்கித் தின்கிறதே! அவர் முன்னிரவில் என்னிடம் என்னென்வோ விதவிதமான சில்மிஷங்கள் செய்தாரே! அதனை மறுத்து நான் எப்படியெப்படியெல்லாமோ நடந்துகொண்டேனே! அந்த இன்ப கலஹ நிகழ்ச்சிகளையெல்லாம் வெளியில் நான் எப்படிச் சொல்வது! என்று தலைகுனிந்தவண்ணம் சிந்தனை செய்தவாறு அவ்விளம்பெண் தன் தோழிகளிடம் சொல்லவும் விரும்பினாள். சொல்லாமல் இருக்கவும் விரும்பினாள் लपितुं (சொல்வதற்கும்) आचकाङ्क्ष (விரும்பினாள்) சொல்லத்தான் விரும்பினாள். अनालपितुं (च) आचकाङ्क्ष சொல்லாமலிருந்துவிடவும் விரும்பினாள். பிறகு தோழிகள் அவள் வாயிலாகவே நடந்தனபற்றிக் கூறக் கேட்க விரும்பி சொல்லுமாறு வற்புறுத்தியதால் அவ்விளம் பெண் வெட்கத்தால் முகம் கவிழ்ந்தபடியே சொல்ல விரும்பியவளாக இருந்தாள். நடந்தவை பற்றிக் கூறிவிடவே விரும்பினாள். लपितुमना: சொல்ல எண்ணம் கொண்டவளாக (இருந்தாள்) लपितुं சொல்வதற்கு समाचकाङ्क्ष விரும்பினாள். இந்த ச்லோகத்தில் நான்காவது வரியில் लपितुमनालपितुम् (லபிதுமனாலபிதும்) என்ற சொல்லை இருவிதமாகப் பிரிக்கலாம் लपितुम् + अनालपितुम् (லபிதும் + அனாலபிதும்) என்றும் लपितुमना: + लपितुम् (லபிதுமனா: + லபிதும்) என்றும் பிரிக்கலாம். இரண்டு விதமாகப் பிரிப்பதால் பொருளும் மாறுபடுகிறது.

இவ்வாறு பல கவிகள் பல பொருள்கள் உள்ள சொற்களைக் கொண்டும், சொல்லைப் பலவாறாக இலக்கண விதிகளுக்கு உட்பட்டே பிரித்துப் பொருள் காணவேண்டிய விதத்தில் பதங்களை அமைத்தும் சிறு சிறு இலக்கியங்களைத் தம் பாண்டித்யத்தை—கவிதை இயற்றும் திறமையை வெளிப்படுத்தும் முகமாக இயற்றியுள்ளனர். அவ்வகையிலான சிறு இலக்கியம் தான் 20 சுலோகங்கள் அடங்கிய ''ராதாவினோத காவியம்'' என்பதும் ஆகும்.

மூலகாவியத்தில் இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தரப்படவில்லை. இந்நூலின் பொருளை அறிவது மிகமிகக் கடினமாகவுள்ளது. உரையின் துணையின்றி ச்லோகங்களின் கருத்தை உணர இயலாது என்பதால் நூல் ஆசிரியரே உரை எழுதியுள்ளாரோ என்று எண்ணச்செய்கிறது. உரையாசிரியர் ''ராமசந்திர'' என்ற பெயருள்ளவர் என்பதாக உரை நூலில் காணப்படுகிறது. 548 / 3841 எண்ணுள்ள இந்நூலின் ஒரு ச்லோகம் தமிழ் உரையுடன் பதிப்பிக்கலாகிறது.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இந்த "ராதா விநோத காவியம்" என்ற 20 ச்லோகங்கள் கொண்ட சிறிய நூல், இந்த ராக்ஷஸ காவியம் வகையினைச் சேர்ந்ததாகவே கூறலாம். நமது சரசுவதி மகால் நூலகத்தில் J. L. எண். 548, D. எண். 3841, S 14 எனும் எண் உள்ள இச்சிறிய நூல் சிறிய சந்தத்தில் அமைந்தாலும், அவற்றில் உள்ள சொற்கள் பல பொருட்களை உடையவையாதலின் எளிதில் பொருள் கொள்ள இயலவில்லை. ஒரே சொல் திரும்பத் திரும்ப வருவதுபோல் தோன்றினாலும் அச்சொற்கள் வெவ்வேறு பொருள்களை உடையன.

मालीनो घनमाली

मालीनो बलमाली ।

मालीनो वनमाली

मालीनोऽवतु माली ॥

மாலீனோ கனமாலீ, மாலீனோ பலமாலீ ।
மாலீனோ வனமாலீ. மாலீனோऽவது மாலீ ॥

वनमाली துளஸி மாலை தரித்துள்ள திருமால் (नो) नः நம்மை अवतु காப்பாற்றுவாராக. திருமால் (கிருஷ்ணன்) எப்படிப்பட்டவர் என்பது — பல விசேஷண வாசக (Adjectives)ச் சொற்களால் விரித்துரைக்கப்படுகிறது. திருமால் घनमाली மேகம் போன்று சற்றே கருமை படர்ந்த திருமேனியையுடையவராம், மேலும் बलमाली பலராமனுடன் இணைந்திருப்பவராம். 'பல' எனும் சொல் பலராமனைக் குறிப்பதுபோல் திறமை, சாமர்த்தியம் என்ற பொருளையும் உணர்த்தும். ஆதலின் மிகுந்த திறமையுடன் — பலத்துடன் கூடியவர். மேலும், அவர் मालीनः 'மா' என்பதற்கு லக்ஷ்மீதேவீ என்று பொருள். லக்ஷ்மியிடம் உறைந்திருப்பவர். காதல் உணர்வு மிகுதியால் நெருக்கமாக இணைந்து இருப்பவர். லக்ஷ்மீயுடன் தன்மயமானவர். லக்ஷ்மீ வேறு. திருமால் வேறு என்று பிரித்துணரமுடியாதவாறு இரண்டறக் கலந்துறைபவர். மேலும் मालीनः 'ம' என்ற குறிலுடன் உள்ள சொல் சிவபெருமானைக் குறிப்பிடுவதாகும். எனவே म+आलीनः சிவபெருமானுடன் இரண்டாகப் பிரித்து அறிய—காண— இயலாதவாறு இணைந்துறைபவர். எனவே சிவபெருமான் வேறு, திருமால் வேறு என்று பிரித்துணரமுடியாதவாறு இணைந்து உறைபவராம். மேலும் म என்ற சொல் பிரம்மனையும் குறிப்பிடும் என்பதால் म+अलि+इनः ப்ரம்மதேவன் எனும் வண்டு அரசனையுடையவராம். திருமாலின் தொப்பூழ்த்தாமரையில் உறையும் பிரம்மதேவனை உடையவர் என்று பொருள். மேலும் मालिन् என்ற சொல் தேவர்களைக் குறிப்பிடும் சொல்லாகவும், "சான்றோர்" என்ற பொருளைக் குறிப்பிடும் சொல்லாகவும் உள்ளது. எனவே தேவர்கள் தலைவன் — சான்றோர்களுக்குச் சூரியன் போன்றவர். சான்றோர்களாகிய

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

தாமரைகளை மலரச் செய்யும் சூரியனாம். மேலும் **மாலீ** மலர் மாலையணிந்து விளங்குபவர்.

இது மாத்திரமின்றி திருமாலின் பத்து வகை அவதாரங்களும் இச்சொற்களால் குறிப்பிடப்படுகின்றன :—

வனமாலீ — "வன" எனும் சொல் நீரையும் குறிக்கும். எனவே வனத்தில் நீரில் உறைபவர். மத்ஸ்ய அவதாரம் இதனால் உணர்த்தப்படுகிறது.

வனமாலீ சங்கசூடன் எனும் அசுரனை ஆமை வடிவம் எடுத்து வதைத்து உலகைக் காப்பாற்றும் வித்தில் மிகுந்த பலம் கொண்டவர்.

ஆதிசேஷ வடிவில் தமது எண்ணற்ற விரிந்து படர்ந்த தலைப்பகுதியில் பதினான்கு உலகங்களையும் தாங்குபவராம். இதனால் கூர்மாவதாரம் உணர்த்தப்படுகிறது.

வனமாலீ வன காடு. காட்டில் சுற்றித் திரியும் வராஹ வடிவுடன் விளங்கு பவர். மேலும் **வன** நீரில் ஆழ்கடல் நீரில் மூழ்கி பூமியைத் தூக்கி நிறுத்தியவர் என்பதால் வராஹ அவதாரம் உணர்த்தப்படுகிறது.

வனமாலீ ஹிரண்யகசிபுவை தம் பலத்தால் அழிந்தவர். நரசிம்மாவதாரம் இதனால் உணர்த்தப்படுகிறது.

மாலீனோऽவனமாலீ அவன மாலீ **அவன** குறுகிய குட்டையான வடிவத்துடன் **மாலின்** விளங்குபவர் என்பதால் வாமன அவதாரம். தேவர்களைக் காக்க மஹாபலி சக்ரவர்த்தியை வென்று அடக்கி, வாமன வடிவில் திருமால் தேவர் களைக் காப்பாற்றியவர் அல்லவா!

மேலும் **வனமாலீ** தம் ஆயுத பலத்தால் கார்த்தவீர்யனைக் கொன்றும் உலகையெல்லாம் வென்றவர் என்பதால்பரசுராம அவதாரம் உணர்த்தப்படு கிறது.

மேலும் **வனமாலீ** தம் அஸ்திரபலத்தால் மாபலம் பொருந்திய ராவணனைக் கொன்றவர் என்று பொருள். இதனால் ராம அவதாரம் உணர்த்தப்பட்டது.

மேலும் **வனமாலீ** தம் பலத்தால் காளிந்தி நதியைத் தம்பால் இழுத்த காரணத்தால் **வனமாலீ**. காளிந்தீ தண்ணீரில் குதித்து "காளியன்" எனும் கொடிய பாம்பினை வென்று சிறப்பெய்தியவர், இதனால் கிருஷ்ண அவதாரம் உணர்த்தப்படுகிறது.

அவனமாலீ ஜீவஹிம்சை செய்யலாகாது என்று அகிம்சையை உணர்த்திச் சிறப்புற்றவர். இதனால் பௌத்த அவதாரம் உணர்த்தப்படுகிறது.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

மேலும் घनमाली தம் பலத்தால் மிலேச்சர்களை அழித்து உலகைக் காப்பாற்றக் கூடியவர் என்பதால் கல்கி அவதாரம் கூறலாகிறது. இது பற்றி ஒரே வரியில் கூறப்படுவதாவது.

वनजो वनजौ खर्वः त्रिरामी सकृपोऽकृपः । என்று.

மேலும் இந்த மூல சுலோகத்தில் ஸம்மோஹன 'மன்மத பீஜ' எழுத்தான 'க்லீம்' என்பதும் உணர்த்தப்படுகிறது. मायी आलीनः மாயா சக்தியில் இணைந்து சிறப்புற்ற என்பது பொருள்.

தேவநாகரி எழுத்துக்களில் அ (अ) முதல் அ: (अः) ஈறாகவுள்ள எழுத்துக்கள் ஸ்வர எழுத்துக்கள் எனப்படும். பிற எழுத்துக்களின் உதவியின்றி உச்சரிக்கப்படுபவையாகும். (स्वेनैव राजन्ते इति स्वराः ।) கவர்கம் முதலாயுள்ளவை உயிரெழுத்தின் உதவி இல்லாமல் உச்சரிக்க, தெளிவாக உச்சரிக்க இயலாதவையாகும், கவர்க முதலான எழுத்துக்களில் ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்பிலும் வேறுபாடு உண்டு. அவற்றில் வேறுபாடு உயிரெழுத்தின் உதவியின்றி உணர இயலாது.

அவ்வாறு சக்தி போன்ற ஜீவநாடி போன்ற உயிரெழுத்துக்களில் சக்தி எழுத்து மந்த்ர சாஸ்திரப்படி ஈ (ई) என்பதாகும். அதனுடன் சேர்ந்து விளங்கும் எழுத்து மெய்யெழுத்துக்களில் முதலாகவுள்ளது 'க்' (क्) என்பதாகக் கொள்ளவேண்டும். ஸம்ஸ்க்ருதத்தில் சாஸ்திர "நியாயம்" ஒன்று உண்டு. அதாவது प्रथमातिक्रमणे मानाभावः என்பதாகும். முதலில் உள்ளதைவிட்டு அடுத்து உள்ளதை எடுத்துக்கொள்வதாயின் அதற்குக்காரணம் (பிரமாணம்) வேண்டும். முதலில் உள்ளதை எடுத்துக்கொள்வதற்கு எந்த பிரமாணமும் (சான்று) தேவையில்லை என்பது அதன் பொருள், அதன்படி சக்தி எழுத்துக்கள் இணைந்து விளங்குவது மெய்யில் முதலாவதாகவுள்ள எழுத்து (க்) क् என்பதாகக் கொள்ளலாம். அத்துடன் घनमाली-घन மேகங்களை அணிகலனாகவுடைய— மேகங்களின் அதிபதி—தலைவன் இந்திரன் ஆவார். மந்த்ர சாஸ்திரத்தில் 'இந்திரன்' என்பதனைக் குறிக்கும் எழுத்து 'ல'காரம் ल् என்பதாகும். எனவே சக்தியுடன் [(ई) ஈயுடன்] இணைந்து இந்திர எழுத்தாகிய (ல்) ल् உடன் விளங்கும் முதல் மெய்யெழுத்து என்பது க்ல்ஈ=க்லீ (क्ली) என்று அமையும். மேலும் मालीनः என்பதாகப் பதத்தை அமைத்தால், मा சந்திரன், அத்துடன் लीन கலந்த என்று பொருள். ஆக ई யுடன் ल् உடன் கலந்த क् எனும் எழுத்து. சந்திர எழுத்து ' அனுஸ்வாரம் 'ம்' எனும் ஒலிதரும் அடையாளம், இவற்றை இணைத்தால் க்லீம் — क्लीं என்று ஆகும். இது "ஸம்மோஹன மன்மத" பீஜம் என்று மந்த்ர சாஸ்திரங்களில் வழங்கப்படும். எனவே ஸம்மோஹன மன்மத பீஜ ஸ்வரூபமான கிருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும் என்றும் பொருள் ஆகிறது.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்வாறு ஒரு எழுத்திற்கு — ஒரு பதத்திற்கு உள்ள வெவ்வேறு பொருளைக்கொண்டு விதவிதமான பொருள் காணும்படி ச்லோகங்கள் அமைப்பது கடினமான ஒன்றுதான். அவ்வாறு அமைக்கும் கவிஞர்கள் மரியாதைக்கு உரியவர்கள்தான். ஆனால் அவ்வாறு கவிதை (செய்யுள்) எழுதினால் படிப்போர் புரிந்துகொள்ளவேண்டுமே. அது யாவருக்கும் எளிதல்லவே என்பதால் இம்மாதிரியான செய்யுட்கள் (ச்லோகங்கள்) அமைந்த இலக்கியம் — காவியம் — கவிஞர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அதனால் அம்மாதிரியான இலக்கியங்கள் ராக்ஷஸ காவிய வரிசையில் சேர்க்கத் தக்கவையாகும்.

ஸ்ரீ ஹர்ஷன் என்று ஒரு கவி இருந்தார். ஹர்ஷவர்த்தனன் என்பவர் அரசன். அவர் வேறு. ஸ்ரீஹர்ஷன் என்பவர் ஸ்ரீஹீர என்பவரின் மைந்தன். ஹீரர் ஒரு அரசரின் அவையில் ஆஸ்தான வித்வானாக இருந்தபொழுது உதயனாசார்யர் என்ற தர்க்கசாஸ்திர அறிஞருடன் ஏற்பட்ட சாஸ்திர வாதத்தில் தோல்வியுற்றார். அக்காலத்தில் ந்யாய / வேதாந்த சாஸ்திர வாதங்கள் அரசவைகளில் வித்வான்களிடையே நடைபெறுவது வழக்கம். ஸ்ரீஹீரரும் சிறந்த அறிவாற்றல் படைத்தவரே. அவர் தோல்வியுற நேரிட்டதும் அவமானம் தாங்காமல் இறந்தார். இறக்கும் முன்பாக அவர் தம் மனைவி மாமல்லதேவியிடம் நமது குமாரன், அரசவையில் எனக்கு நேரிட்ட இந்த அவமானத்தைத் துடைக்கவேண்டும். அப்பொழுதுதான் என் ஆன்மா சாந்தியடையும் என்று கூறிவிட்டு இறந்துவிட்டார். அச்சமயம் ஸ்ரீஹர்ஷர் சிறு குழந்தை. ஸ்ரீஹர்ஷனைப் பெரிய அறிவாற்றல் மிக்கவனாக ஆக்கும் பொறுப்பு தாய் மாமல்லதேவியிடம் ஒப்படைக்கப்பட்டதைச் செயல்படுத்த அந்த விதவைத் தாய் உறுதி கொண்டாள்.

அக்காலத்தில் ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களும் கூட மந்த்ரங்களை ஜபிக்கும் பழக்கமுள்ளவர்களாக இருந்தனர். கல்விக்கு உரிய தெய்வமாக விளங்கிய ஸ்ரீபராசக்தியின் உயர்ந்த மந்த்ரங்களில் "சிந்தாமணி" எனும் மந்த்ரமும் ஒன்றாகும். அளவில் இது மிகச்சிறிய மந்த்ரமேயானாலும் உரிய விதத்தில் ஜபம் செய்தால் ஸித்தி பெறலாம். மாபெரும் மேதாவிலாசம் பெற்றவராகலாம். தன் புருஷன் ஸ்ரீஹீரரிடம் இந்த மந்த்ரத்தைப் பெற்றிருந்த அந்தத் தாய், சக்திவாய்ந்த அந்த மந்த்ரத்தை ஸ்ரீஹர்ஷனுக்கு உபதேசம் செய்துவிட எண்ணினாள்.

அந்த சிந்தாமணி மந்த்ரத்தை ஒரு பிணத்தின்மீது அமர்ந்து ஜபம் செய்தால் விரைவில் ஸித்தியாகும் என்பது அந்த மந்திர விஷயத்தில் அமைந்த விதியாகும். ஸ்ரீஹர்ஷனுக்கு உரிய பருவம் வந்ததும் அவனிடம் இரவு முழுவதும் நீ இந்த மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று சொல்லி, அவன் உதயனாசார்யரை சாஸ்திர வாதத்தில் வெல்லவேண்டும்

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

என்றும்கூறி உறுதிமொழி பெற்று, அவனும் சம்மதித்து ஜபம் செய்வதாகச் சொல்லியதும், சிந்தாமணி மந்த்ரத்தை மாமல்லதேவி அவனுக்கு உபதேசம் செய்தாள்.

இளமையிலிருந்தே தாயின் பக்கத்தில் படுக்கும் பழக்கம் கொண்டிருந்த ஸ்ரீஹர்ஷனைப் பக்கத்தில் படுத்துக்கொள்ளச் செய்து, அவன் தாயை அணைத்தவாறு ஜபம் செய்துகொண்டிருக்கும்பொழுது, மாமல்தேவி இறந்து போனாள். தாய் பிணமாகிவிட்டது தெரியாமல் இரவு முழுவதும் ஜபம் செய்துகொண்டே இருந்த ஸ்ரீஹர்ஷனுக்கு, அந்த சிந்தாமணி மந்திரத்தில் ஸித்தி ஏற்பட்டுவிட்டது.

ஸ்ரீ பராசக்தியின் திருவருளால் மேதாவிலாசம் பெற்று சிறந்து விளங்கிய ஸ்ரீஹர்ஷன் தர்க்கம் முதலான சாஸ்திரங்களைக் கற்றுத் தன் தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு ஈடுசெய்ய எண்ணி, பலரையும் வாதத்தில் தோற்கடித்தான். அப்பால், ஸ்ரீஹர்ஷன் நள மஹாராஜனின் கதையைக் காவிய வடிவில் அமைக்க எண்ணி எழுதலானான். அந்நூலுக்கு "நைஷதம்" என்று பெயர்.

அக்காலத்தில் ஸம்ஸக்ருதப் பேராசிரியர்கள் பலர் சிறந்து விளங்கியதுடன், ஸம்ஸ்க்ருத மொழி அரசாங்க ஆதரவுடன் தழைத்திருந்தது. எனவே எண்ணற்றவர்கள் ஸம்ஸ்க்ருதப் புலமை பெற்றவர்களாய் இருந்தனர்.

ஸ்ரீஹர்ஷன் எழுதிய "நைஷத காவியம்" அந்நாட்களிலேயே எந்த அறிஞனாலும் புரிந்துகொள்ள முடியாதவாறு மிகமிகக் கடினச் சொற்களால் அமைந்திருந்தது. கவிஞர்களிடையே மதிப்புப்பெறாத அக்காவியத்தை ஸ்ரீஹர்ஷனே தீயிலிட்டுக் கொளுத்தி அழித்தான்.

பலகாலம் நாடெங்கிலும் சுற்றி அலைந்து கவிதை எழுதும் எண்ணமின்றி இருந்துவிட்டு மறுபடியும் ஒருமுறை நைஷத காவியத்தை எழுதலானான். அதுவும் மிகமிகக் கடுமையாகவே இருந்ததால் அதற்கும் கவிஞர்களின் அங்கீகாரம் கிட்டவில்லை. அதன்பிறகு பல வருஷங்கள் உண்பது, உறங்குவது என்று சாஸ்திரப் பயிற்சியையே முற்றிலும் கைவிட்டான். அப்பால் ஒருமுறை எழுதிய நைஷத காவியம்தான் இன்றளவும் புழக்கத்தில் இருந்துவருகிறது. இன்றும்கூட ஒரு பழமொழி உண்டு, " नैषधं विद्वदौषधम् " என்பதாம்.

நைஷத காவியம் என்பது பிற அறிஞர்களிடமும் கல்வியாளரிடமும் குறைகள் காணும் அறிவாற்றல் பெற்ற அறிஞர்களுக்கும்கூட மருந்தாகும் என்பது இதன் பொருள். மாபெறும் அறிஞர்கள்கூட இந்த நைஷத

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

காவியத்திலுள்ள செய்யுட்களுக்கு எளிதில் பொருள் காண்பது கடினம் என்பதால் நைஷதம் என்றாலே அறிஞர்களுக்கு வேம்பாகக் கசக்குமாம் இந்தப் பழமொழி இன்றளவும் உண்மையாகியுள்ளது.

இவ்வாறு கடினச் சொற்களைக் கொண்டும், ஒரு சொல்லுக்கு இன்னொரு சொல்லுடன் எளிதாக சம்பந்தம் காண்பதற்கு இயலாதவாறும், இலக்கியங்களை அமைத்தால் அக்காவியங்களுக்கு அறிஞரிடையே வரவேற்பு இருக்காது. அறிஞரிடையே மதிப்பிழந்த அத்தகைய காவியங்கள் காலப் போக்கில் வழக்கொழிந்ததாகிவிடும். ரகுவம்சம், குமாரசம்பவம், சிசுபால வதம், கிராதார்ஜுனியம், நைஷதம் எனும் பஞ்ச (ஐந்து) மஹாகாவியங்களில் நைஷதம் எனும் காவியத்தை ஸம்ஸ்கிருத மொழிக்கு ஆதரவு இருந்த முன்நாட்களிலேயே பலரும் விரும்பிப் படிப்பதில்லை.

ரகுவம்சம், குமாரசம்பவம், மேகஸந்தேசம், சாகுந்தலம் போன்ற காவியங்களுக்கு உள்ள வரவேற்பு — மஹாகாவியமான — நைஷத காவியத்திற்கு இல்லையென்பதே உண்மை. அதற்குக் காரணம் சொற்களைப் பிரிப்பதிலும், பொருத்தமுள்ள சொல்லுடன் இணைப்பதிலும் உள்ள கடின நிலையேயாகும்.

இம்மாதிரி காவியம் எழுதுகிறவர்கள் தமது அறிவாற்றலுக்குச் சான்று கூறும் சின்னங்களாகத்தான் அவற்றை இயற்றிச் சென்றிருக்க வேண்டும். அவை நூலகத்திற்கு அணிகலனாகத்தான் இருந்துவரவேண்டும். அறிஞர் சமுதாயத்தில் அவைகட்கு மதிப்பு, ஆதரவு இருக்காது. அம்மாதிரி நூல்களில் ஊன்றி மனதைச் செலுத்தி பொருள் காண்பதில் காலத்தை வீண் செய்ய விரும்ப மாட்டார்கள். வால்மீகி இராமாயணம், ரகுவம்சம் போன்ற எளிதில் பொருள் காணத்தக்க இலக்கியங்கள்தான் ஸம்ஸ்க்ருத அறிஞர்களின் சமூகத்தில் மதிப்பு பெறுகின்றன.

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy

SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR

T CC-0. Sarasvati Mahal Series. Digitized by Sri Muthulakshmi Research Academy